
உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

குமரகுருபரன்



மலர் 11 | 1960-ஆ பங்குனித் திங்கள் | இதழ் 3

சிதம்பரச் செய்யுட் கோவை

தருமையாதீனம் முதுபெரும்புலவர்,
திரு. முத்து. சு. மாணிக்கவாசகர் அவர்கள்

(கட்டுரை 32)

காண்மின், காண்மின், எதனை? வகையை. எதன் வகை? கூத்தின் வகை, அக்கூத்து யாருடையது? உயிர்களுடையதா? அன்று அன்று. கடவுளுடைய திருக்கூத்து. உயிர்களுக்குத் தனியே கூத்து ஏது? கடவுள் ஆட்டுவிக்க உயிர்கள் ஆடுகின்றன. அக்கடவுளது ஆட்டம் இன்றேல் உயிர்கள் ஆடவல்லன அல்ல. அதனால் உயிர்களுக்கு ஆடுதல் (கூத்து) ஏது? 'ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே'? என்று வினவியருளினார் திருத்தாண்டகச்சதுரர். அதன் கருத்து ஜீவநடனம் சுதந்திரநடனம் அன்று என்பதே. சிவநடனம் ஒன்றே சுதந்திர நடனம். எனைத் தெய்வங்களும், தேவர்களும், மக்களும்,

மற்றுள்ள உயிர்களும் சிவநடனம் நிகழ நிகழ்வதாகிய நடன
தனவே.

அச் சிவநடனம் ஞானநடனம் ஊனநடனம் என்று
திறம் உள்ளது.

"ஊன நடனம் ஒருபால்; ஒருபாலா
ஞான நடம்; தான்நடுவே நாடு"

என்று 'திருவருட்பயன்' உணர்த்தி விளங்குகின்றது. இத
பொருள் விளங்குமோ? அது விளங்க எச் சைவர் இச்சைவை
கின்ருர்? திருவைந்தெழுத்துள் இதன் உண்மையை அமைத்துக் காட்டியருள்கின்ருர் நம் குரவர் உமாபதி தேவநாயனுர். 'நமச்சிவாய வாழ்க' என்பதில் உள்ள திருவைந்தெழுத்தை இங்கு எண்ணுதல் பொருந்தாது. 'சிவாயநம எனப் பெற்றேன்' என்ற திருவாசகமே விளக்கம் உறப்பொருந்துவதாகும். 'சிவாயநம' என்பதன் நடுவே உள்ளது உயிர். அதனைத் திருவருட்பயன் 'தான் நடுவே' என்று குறித்தது. முன்னுள்ள சிகார வகாரங்களைக் குறித்த உண்மைச் சார்பே ஞானநடனம். உயிர்களை வகாரம் சிகாரத்தின் பாற் சேர்ப்பது ஞானநாடகம். நகாரம் (திரோதானசத்தி) மகாரச் சார்பைத் தீர்க்கும் பொருட்டு (மலபரிபாகம் இருவினை யொப்புண்டாகும் பொருட்டு) மாயையுள் அழுத்துவது ஊனநாடகம். ஆசையற்ற உயிர்கள் ஆண்டவன் அருளாநந்தக் கடலுள் முழுகித் திளைப்பர். அத்திளைப்பு ஞான நாடகக்களிப்பு. ஆசையருதவர் மாசையுற்றவர் மருளானந்தக் கடலுள் மடிந்து மயங்குவர். அம்மயக்கு ஊன நாடகக்களிப்பு. இவ்விரண்டு நாடகமும் யகாரம் ஆகிய உயிர்களின் பொருட்டே நடராசப் பிரானுர் நடாத்தியருள்கின்ருர். அதனைத் திருவைந் தெழுத்துண்மையால் அறியற்பாலது. அதனை விதிப்படி உபதேசமார்க்கத்தாற் பெற்றுக் கணிக்கவல்லார்க்கு ஊனநாடகம் ஒழியும். ஞானநாடகம் நண்ணும். இத்'திருவருட்பயன்' இவ்விருநாடகத்தையும் எங்கிருந்து கொண்டு கூறுகின்றது? அதனை அறிவது சைவத்தின் சிறப்பை அறிவதாகும். மாணிக்கவாசகர் அருளிய உண்மையை ஐந்தெழுத்தருணிலையிற் கண்டு கொண்டு கூறியதே- இது. சந்தானுசாரியர் நால்வரும் பிறரும் சமயாசாரியர் திருவாக்குக்களை நன்குணர்ந்து செய்

தருளியனவே மெய்கண்ட சாத்திரக் கருத்துக்கள். அவ்வுண்மைக்கு ஈதும் ஒரு சான்ருகும்.

"வான நாடரும் அறியொ ணாத நீ
மறையில் ஈறுமுன் தொடரொ ணாத நீ
ஏனை நாடரும் தெரியொ ணாத நீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊன நாடகம் ஆடு வித்தவா
உருகி நான்உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே."

(திருவாசகம் – திருச்சதகம்)

இத் திருவாசகத்தைப் பொருளறிய மாட்டாதார் வெளியீடு பிழையாக்கிற்று. அதைப் பார்த்துப் பலரும் அவ்வாறே வெளியிட்டு வருகின்றனர். 'ஊனை' என்று இரண்டனுருபுடன், உள்ளன இப்போதைய வெளியீடுகள். இறுதியில் உள்ள 'விச்சையே' என்பது சிலபதிப்பில் இச்சையே என்றும் உள்ளது. அடுத்த திருவாசகத்தில் 'விச்சதின்றியே விளைவு செய்குவாய்' என்று அந்தாதித்தொடையில் அமைத்தருளிய உண்மையை அறியாதார் அப்படிப் பிரித்தது வியப்பூட்டாது அறிஞர்க்கு. நகைப்பும் திகைப்பும் கூடத்தோற்ருது. மற்று என்னே? வருத்தமே பெருக்கும். ஆடுவித்தவன் நடராசன் ஆடின (ஆடுவன) உயிர்கள். ஆடல் இருதிறம், ஒன்று ஊனநாடகம்; ஒன்று ஞானநாடகம். அவற்றுள் ஊனநாடகம் பலபிரிவுடையது என்பது எழுவகைப் பிறப்பாலும் நால்வகைத் தோற்றத்தாலும் வெள்ளிடைமலே.

ஞான நாடகமும் பலதிறமுடையது. அதனை அறிவது எளிதன்று. 'அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேருங்குறியது வுடைத்தாய், வேதாகமங்களின் குறியிறந்து அங்கு அறிவினில் அருளாய் மன்னி அம்மையோடு அப்பனுகிச் செறிவோயழியாது நின்ற சிவன்' என்று அருணந்திதேவ நாயனர் அருளிய உண்மையை விளங்க அறிவார்க்கே எளிதாகும். தனித்தனி அறுவகைஆக நாற்கூறுபடும் சமய ஞானங்களும் ஞானநாடகமே. அவற்றின் வேருங்குறியும் வேதா

கமங்களின் குறியைக் கடந்ததும், அறிவினில் அருளாய் மன்னி யதும், அம்மையப்பனுனதும், செறிவோழியாததுமாய் நின்ற சிவஞான சரிதமும் ஞான நாடகமே. இம்முடிவான ஞானமே சைவ சித்தாந்த ஞானம். இதில் அமைந்த நிலையைக் குறித்ததே திருவைந்தெழுத் துண்மையிற் கூறிய 'ஞானநடம்.' திருவாசகத்துட் கூறிய ஞானநாடகம் எல்லாச் சமயங்கட்கும் பொதுவானது. அஃது எவ்வுயிர்க்கும் பொருந்துவது. திருவருட் பயனில் உணர்த்திய 'ஞானநடம்' சைவசித்தாந்திகட்கே சிறப்பாய் உரிய முத்தித்திறம். அத்திறத்தையே 'கறைக்கண்டன் ஆடும் திறம்' என்று பிரித்துணர்த்தி யருளினர் ஆசிரியர் குமரகுருபர முனிவரர். 'சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்ரும்' 'சைவத் திறத்தடைவர்' என்னும் இடத்தில் உள்ள 'திறம்' இரண்டும் வெவ்வேறு கருத்துடையன. அவற்றுள் முதலாவது சைவாகமப் பொருளின் திறத்தையும் இரண்டாவது சைவக் கூற்றின் முடிபாகிய சித்தாந்த சைவத்தையும் குறிப்பது. முன்னது நூலின்கண் தெரிக்கலுற்ற பொருளின் திறம். பின்னது சைவசித்தாந்த ஞானச் செல்வம்பெறச் சைவராவார்க்குப் படிமுறையான் எய்தும் நிலையில், புறச்சமய நெறிநிற்றல் முதலிய யாவும் உற்று, வேதாந்தப் பொருளை மிகத் தெளிந்து சேறல் உற்ருல் தலைப்படும் சித்தாந்த சைவச் சார்பாகிய திறம். ஏனைய சமயச்சார்புகளின் நீங்கி இதனை எய்தும் ஆற்ருல் இஃது ஒருதிறம் ஆதல் அறிக. 'திறம்' என்னுஞ் சொல்லின் பொருளைத் தெளிய வுணர்வார்க்கே ஆண்டாண்டுக் குறித்த உண்மை புலப்படும்.

"உலகிருள் உருவத் தொளிகளின் இரித்தாங்
குறுபொருள் எவற்றையும் தெரித்துள்
விலகிருள் முழுதும் அருள்கொடு துமித்து
விராய்ஒளிர் தன்னையும் தன்ஞல்
இலகுயிர் தனையும் தெரித்தறி வுறுக்கும்
இயல்பின்எக் காலமும் பிறழா
தலகில்அற் புதக்கூத் துமையினைக் காட்டும்
அடிகள்சே வடிகளைப் பணிவாம்."

இத்தணிகைப் புராணத்துத் தோத்திரப் பாடல் அவ்விரு நடனத்தையும் உட்கொண்டது. நந்தி யுபதேசப் படலம் 131,

140-ஆம் திருவிருத்தங்களை நோக்கி அவ்விரண்டன் வேறு பாட்டை விளங்க வுணர்தல் சிறந்தது. சித்தியாரில்,

"உலகமே உருவம்ஆக யோனிகள் உறுப்ப தாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரிகையுட் கரண மாக
அலகிலா வுயிர்ப்பு லன்கட் கறிவினை யாக்கி ஐந்து
நலமிகு தொழில்க ளோடும் நாடகம் நடிப்பன் நாதன்".

என்றதுஊனநாடகம். அதிசூக்குமமாகிய இந்நலமிகுதொழில்கள் ஐந்தனுள் ஒன்றாகிய அநுக்கிரகம் ஞானநாடகம். இதனைத் தெரிவிப்பது அன்று இத்திருவிருத்தம். ஏகதேச அறிவை நிகழ் வித்துச் சிறுபோகம் கொடுத்துப் பிறவியிற் படுத்துதலே இதில் தெரிக்கலுற்றது. அதனால் ஊனநாடகமே இதிற் கூறப்பட்ட தாம். சூத்திரம் எட்டு முதல் 'ஞானநாடகம்' விளக்கப்பட்டது. 'காயம் ஒழிந்தால்' என்ற தொடக்கத்தது ஞானநாடகத்தை உணர்த்துவது.

"கூற்றிருக்கும் அடலாழிக் குரிசில்முத லோர் இறைஞ்சக்
கொழுந்தேன் பில்கி
ஊற்றிருக்குந் தில்லைவனத் தசும்பிருக்கும் பசும்பொன்மன்றத்
தொருதாள் ஊன்றி
வண்டுபா டச்சுடர் மகுடம்சூ டப்பிறைத்
துண்டம்ஆ டப்புலித் தோலும்ஆ டப்பகி
ரண்டம்ஆ டக்குலைந் தகிலம்ஆ டக்கருங்
கொண்டலோ டுங்குழற் கோதையோ டுங்கறைக்
கண்டன்ஆ டும்திறம் காண்மினோ காண்மினோ."

ஆழி - சக்கிரப் படை. குரிசில் - திருமால். முதலோர் - பிரமன் இந்திரன் தேவர் முதல் யாவரும். அசும்புதல் - துளித்தல் 'உருகிய பசும் பொன் அசும்ப, (96) கோதை (சிவகாமி)யின் கருங்குழல் கார்மேகத்தை ஓட்டும். கறை - நஞ்சின் கறுப்பு. கண்டன் - திருநீலகண்டப்பிரான். 'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது.'

(தொடரும்)

மெய்யுணர்வு

தருமபுர ஆதீன வித்துவான்,
திருவண்ணாமலை ஆதீனவிரிவுரையரசு, மதுரை ஆதீனச் சித்தாந்த
சைவ வித்தகர், சித்தாந்தப் புலவர்மாமணி, பாலகவி
வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

உலகப் பேரறிஞர் அனைவரையும் தன்பக்கல் ஈர்த்திழுத்து இன்புறுத்தும் தனிப்பெரு நூலாகிய திருக்குறள் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களைக் கொண்டு விளங்குகின்றது. அறத்தை முப்பத்தெட்டு அதிகாரங்களிலும் பொருளை எழுபது அதிகாரங்களிலும் காமத்தை இருபத்தைந்து அதிகாரங்களிலும் அறிவுறுத்திய ஆசிரியர் திருவள்ளுவர் "மெய்யுணர்தல்" என்னும் தலைப்புடைய அதிகாரம் ஒன்றை அறத்துப்பாலில் முப்பத்தாறுவது அதிகாரமாக அமைத்து வழங்கியுள்ளார்.

திருக்குறள் உரையாசிரியர் பலருள் பெயர் அறியப் பெறாதவராக ஒருவர் காணப்பெறுகின்றார். அவரது உரை "பழைய உரை" என்று வழங்கப்பெறுகின்றது. முதற்பதினொரு அதிகாரங்களுக்கு மட்டும் முழுதும் கிடைத்துள்ள இவ்வுரைப் பகுதியைத் திருக்குறள் உரைவளத் தொகுப்பாசிரியர் திரு. ச. தண்டபாணி தேசிகரவர்கள் தருமையாதீனப் பதிப்பில் எடுத்து வெளியிட்டுள்ளார்கள். அப்பழையவுரைக்குச் "சைவ உரை" என்றதொரு பெயரும் உண்டு என்பது அப்பதிப்பால் அறியப் பெறுகின்றது. கடவுள் வாழ்த்துக் குறட்பாக்களுக்கு அவ்வுரையாசிரியர் உரைக்கும் உரை அவரது சைவசித்தாந்த நூற்பயிற்சியை நன்கு புலப்படுத்திக் கொண்டிருக்கிறது.

அவளிவணல்லூர் ஸ்ரீ சாட்சிநாத சுவாமி கோவில் குடமுழுக்குப் பெருவிழா நினைவு மலரில் வந்துள்ள இக்கட்டுரை ஷ கோவில் தர்மகர்த்தர் அனுமதியுடன் பிரசுரிக்கப் பெறுகிறது.

கலைஞான கருவூலமாகிய அவ்வாசிரியர் மெய்யுணர்தல் என்பதைச் "சிவஞானமறிதல்" என்று விளக்கிக் காட்டுகின்றார். மெய் கண்ட நூல்களில் அறிவை மூன்று வகைப்படுத்தி முதலில் உலகத்தைப் பற்றியறியும் அறிவு "பாச அறிவு" என்றும், பின்னர் உயிர்களைப் பற்றியறியும் அறிவு "பசு அறிவு" என்றும், முடிவில் இறைவனைப் பற்றியறியும் அறிவு "பதி அறிவு" என்றும் ஆன்றோர் கூறினர். ஒருவன் ஒரு பொருளின் உண்மை இயல்புகளை ஆராய்ந்தறிந்து அது பற்றிய முடிவில் உரைத்து நிற்பதற்குக் காட்சியும் கருத்தும் உரையும் ஆகிய மூவகை அளவைகள் அவனுக்குத் துணைபுரிவனவாம்.

கண்ணுக்குப் புலனாகும் பொருள்களை நேரிற்கண்டு அவற்றைப் பற்றிய முடிவுகளை மேற்கொள்ளுவதற்குக் காட்சி அளவை துணை நிற்கும். கண்ணுக்குப் புலப்படாததொரு பொருளை அதனோடு ஒற்றுமையும் தொடர்பும் கொண்ட பிறிதொரு பொருளைக் கண்டு உறுதி செய்து அதுபற்றிய முடிவைக் கடைப்பிடிப்பதற்குக் கருதல் அளவை உதவி செய்யும். கண்ணாலும் கருத்தாலும் காணமாட்டாத பொருள்களைப்பற்றிப் பிறர்எடுத்துச் சொல்ல அவர் சொற்களைக் கேட்டவளவானே அவற்றைப் பற்றிய முடிவை யறிகின்றபோது உரை அளவை முன்னின்றுதவும்.

இனித் தொல்லாசிரியர்கள் உண்மைப் பொருள்களெனக் கண்டுரைத்த மூன்றனுள் பாசமும் பசுவும் மேற்கண்ட மூவகை அளவைகளைக்கொண்டு அறியப் பெறுவனவாம். பதிஇவ்வளவை களால் அறியப் பெறாததாய் அனுபவம் பற்றி நிகழும் சிவஞானத் தால் அறியப் பெறுவதாய் இருப்பது. பொருள்களையறியும் பாச அறிவும், உயிர்களை அறியும் பசு அறிவும் இறைவனையறியும் பதி அறிவுக்குப்படி முறையில் நின்று உதவி புரிவனவாம்.

உலகத்திலே நிலவுகின்ற பலவேறு வகைபட்ட சமயங்களில் காட்சியளவை ஒன்றையே ஏற்பனவும் அதனோடு கருதல் அளவையும் உடன்படுவனவும் அதற்குமேல் உரையளவையும் ஒப்புவனவுமாகச் சமயங்கள் பல உள்ளன. இவ்வளவைகளுக்கு அப்பாற்பட்டுள்ள "மெய்யுணர்வு" என்ற அளவையை ஏற்றுக் கொள்ளுவனவாகச் சிற்சில சமயங்கள் உள்ளன என்றாலும்

அவைகளனைத்தும் மெய்யுணர்வுக்கு விளக்கங் கூறுகின்ற பொழுது வழுக்கி விழுந்து இடர்படுகின்றன வென்பது அனுபவ ஞானிகள் கண்டு கூறிய பேருண்மையாகும்.

காட்சி, கருத்து, உரை ஆகிய அளவைகளைக் கொண்டு பசு பாச உண்மையியல்புகளைச் செம்மையாக ஆராய்ந்து அறிந்த பொழுது அப்பசுபாசங்களுக்கு அப்பாற்பட்டு அவற்றின் தொழிற்பாட்டுக்கு நிமித்த காரணனாகப் பதியொருவன் இருக்கின்றான் என்னும் உண்மை புலப்படுதல் கூடும். அதுவே மெய்யுணர்வின் முதற்படி. பாசக் கூட்டுறவால் வந்த உடம்பைத் தானென்று முதலில் கருதிய உயிர் அவ்வுடம்பு முதலியவை தன்னின் வேறுதலை யறிந்தபொழுது தன்னுண்மையைத் தெரிந்து கொள்ளும். பின்னர்த் தன்னிச்சைப்படியே அனைத்துச் செயல்களும் நிகழாமை முதலியவற்றை யறிந்து தன்னை உலகத்தோடு தொடர்புபடுத்தி வைத்துத் தொழிற்படுத்துகின்ற தலைவனுண்மையை உணரும். அவ்வுணர்ச்சி வந்ததும் பாசத்தொடர்பால் உண்டாகிய துன்பத்திலிருந்து விடுதலை பெற்றுப் பதியைத் தொடர்பு கொண்டு இன்பமுற எண்ணி அதற்கான முயற்சியில் தலைப்படும்.

அவ்வாறு மெய்ப்பொருளை யடையும் விருப்பத்தினால் அதற்கேற்ற சாதனத்தைச் செய்ய முற்படும் பொழுது ஆண்டவனது திருவருள் முன்னின்று அதற்குவேண்டிய உதவியைச் செய்யும். பாச அறிவாலும் பசு அறிவாலும் பார்க்க முடியாத பரம் பொருளைப் பார்க்க வைக்கின்ற பதியறிவு திருவருள் என்றும், சிவஞானமென்றும், பரஞானமென்றும், மெய்யுணர்வென்றும் குறிக்கப்பெறும்.

மெய்யுணர்வுக்கு இலக்கணங் கூறவந்த ஆசிரியர் பரிமேலழகர் "பொருள் தோறும் உலகத்தார் கற்பித்துக் கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து நின்ற உண்மையைக் காண்பது" என்று உரைக்கின்றார். "எக்காலத்திலும் எவ்விடத்திலும் அழியாது நிற்கும் பொருள் இதுவென உணர்தலே மெய்யுணர்தல்" என்பது மணக்குடவர் உரைக்குறிப்பு. "யாதொரு பொருள் யாதோர் இயல்பிற்றாய்த் தோன்றினும் அத்தோன்றிய

வாற்றைக் கண்டொழியாது அப்பொருளின் கண் நின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வு" என்பார் திருவள்ளுவர். "பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பார்; பதார்த்தங்கள் பாரார்" என்பது சிவஞான சித்தியார்.

பொது மறையாகிய திருக்குறளில் பொய்யை மெய்யாக உணர்வதனால் பிறப்புண்டாகும் என்பதனை முதற்கண் வலியுறுத்திக் கல்வியால் வரும் அபரஞானமும் அனுபவத்தால் வரும் பரஞானமும் உடையவர்கள் பிறப்பில்வாராத பெருநெறியை எய்துவார்கள் என்று இடையிற் சொல்லி மெய்யுணர் வுடையார்க்கு வினைப்பயன்கள் உளவாகா என்பதனை இறுதியில் நிலைநாட்டி மெய்யுணர்தல் அதிகாரம் நிறைவு பெறுகின்றது.

கல்வியால் வரும் அபரஞானம், அனுபவத்தால் வரும் பரஞானத்திற்கு அடித்தளமாயிருந்து உதவுவ தாகையால் அவ்விருவகை ஞானமும் முத்தியை வேண்டுவோருக்கு இன்றியமையாதனவேயாம். அதனால் கலையறிவையும் மெய்யுணர்வென்று உபசாரமாகச் சொல்லுவதுண்டு. கலைஞானம் கல்வியால் வருவதென்பதை "கற்றறியேன் கலைஞானம்" என்ற திருவாசகம் அறிவிக்கின்றது.

பாசஞான பசுஞானங்களை அபரஞானமென்றும், பதிஞானத்தைப் பர ஞானமென்றும் சைவசித்தாந்த நூல்கள் கூறும். கல்வி கேள்விகளால் வருகின்ற அபரஞானம் கேட்டல் சிந்தித்தல் என்னும் சாதனைகளாலும் அருளால் வருகின்ற பரஞானம் தெளிதல், நிட்டை கூடல் என்னும் சாதனைகளாலும் வருவனவாகும். அடிமை நெறியென்றும், மகன்மை நெறியென்றும், தோழமை நெறியென்றும், நன்னெறியென்றும் பேசப்பெறுகின்ற சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும் நான்கும் சரியை முதலாகப் பதினாறு வகைப்படுமென்று கூறி அவற்றுள் ஞானத்திற் சரியை முதலிய நான்கையும் விளக்கப் புகுந்த மதுமாதவச் சிவஞானயோகிகள் "கேட்டல் ஞானத்திற் சரியை, சிந்தித்தல் ஞானத்திற் கிரியை, தெளிதல் ஞானத்தில் யோகம், நிட்டைகூடல் ஞானத்தில் ஞானம்" என்று கூறுவாராயினர்.

இனி ஞானத்திற்கு விளக்கம் கூறும் பொழுது சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றும் "முறையே அடிப்பட்டுவரா நிகழும் பக்குவ முதிர்ச்சியானே உள்ளவாறு உணர்வு விளங்கி அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப்பிழம்பே சொரூபம்; எனச் சகளம் முதலிய மூன்றும் தூலாருந்ததி நியாயமாக அதனை உணர்தற் பொருட்டும் வழிபடுதற் பொருட்டும் கொண்ட திருமேனி என்று இவ்வாறு உணர்ந்து காயத்தொழில் மனத்தொழில் இரண்டனையும் கைவிட்டுக் கேட்டல் முதலிய அறிவுத்தொழில் மாத்திரையான் வழிபடுவது ஞானம் என்று சிவஞான பாடியும் உரைக்கின்றது.

இதனால் வீடுபயக்கும் உணர்வாகிய மெய்ஞ்ஞானம் சரியையிற்சரியை முதலாகச் சொல்லப்படுகின்ற படிமுறைகளில் இறுதிக்கண்ணதாகிய பதினாறுவது படியாய் இருக்கின்ற ஞானத்தில் ஞானம் எனப்பட்டு அது நிட்டை கூடலாகிய கருவி கரணம் கடந்த முயற்சியில் பெறப்படுவது என்பதும் இவ்வாறு முடிந்த முடிவாகிய ஞானத்தில் ஞானம் கைவரப் பெற்றவர்க் கன்றி ஏனையோருக்கு மீண்டுவாரா நெறியாகிய பரமுத்திநிலை கிட்டாதென்பதும் உணரத் தக்கனவாம்.

இனிச் சிவஞானமாகிய மெய்யுணர்வு எவ்வாறு உண்டாகும் என்பதைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுவது இன்றியமையாத தல்லவா? சிவஞானபோத எட்டாஞ் சூத்திரம் இதனை நன்கு தெரிவிக்கின்றது. "ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந் தெனத், தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட், டன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே" என்பது அது. சிவஞானமாகிய மெய்யுணர்வு இறைவன் குருமூர்த்தமாய் எழுந் தருளிவந்து உணர்த்தினால் அன்றி உண்டாக மாட்டாது என் பதை இச் சூத்திரத்தால் அறிகின்றோம்.

உயிர்களை ஆணவ மலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலரும் அதனோடு கன்ம மலமும் உடைய பிரளயா கலரும் அவற்றோடு மாயா மலமும் உடைய சகலரும் என மூவகைப்படுத்திக் கூறுவர் ஆன்றோர். இவருள் விஞ்ஞான கலருக்கு அறிவுக்கறிவாய் உண்ணின்று தன்மையினும், பிரளயா கலருக்கு நாற்றோளும்

முக்கண்ணும் கறைமிடறும் முதலிய உறுப்பிற்ருய் முத்தொழில் நடாத்துகின்ற தனது இயற்கை வடிவே குருவடிவாகக் காட்டி முன்னிலையிலும், சகலருக்கு அவர் வடிவுபோலும் குருவடிவாகிய மானுடப் போர்வையின் மறைந்து நின்று உபதேச முகத்தால் படர்க்கையிலும் இறைவன் மெய்யுணர்வை யளிப்பான் என்பது சைவ சித்தாந்த ஞானநூல்களின் முடிபாகும்.

திருஞானசம்பந்தப் பெருமான் இறைவியின் திருமுலைப் பால் உண்டுஞானம் எய்தினர் என்பதனைக் கூறவந்த சேக்கிழார் பெருமான் உவமையிலாக் கலை ஞானமாகிய சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தையும் உணர்வரிய மெய்ஞ்ஞானமாகிய பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானத்தையும் தவமுதல்வராகிய சம்பந்தர் உணர்ந்தார் என்று சொல்லி அவரது அபரஞான பரஞானப் பேற்றை நமக்கெடுத்துக் கூறுகின்ருர். இங்கே சம்பந்தரைத் தவமுதல்வர் என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுவதில் பிறிதொரு பேருண்மையும் புலப்படுகின்றது. இறைவன் குருவாய் எழுந்தருளிவந்து மெய்யுணர்வை வழங்குவதற்குச் சரியை, கிரியை யோகங்களிற் பயின்ற தவம் வேண்டற்பாலதன்ருே? அத்தவம் முற்றியிருந்த காரணத்தினலேயே ஆளுடைய பிள்ளையாருக்கு ஆண்டவன் எதிர் நின்று ஞானம் நல்கி அருள் செய்தான் என்பது சேக்கிழார் பெருமான் பிள்ளையாரை இங்கே தவமுதல்வர் என்று குறித்ததிலிருந்து அறியக் கிடக்கின்றது.

பிறவிபெற்றதன் பயனுகப் பெறத்தக்க பரமுத்திப்பேற்றை நல்கவல்ல சிவஞானமாகிய மெய்யுணர்வு கல்வி கேள்விகளாலும் ஆண்டவன் அருளாலும் உண்டாகின்ற கேட்டல், சிந்தித்தல்; ஆண்டவன் அருளாலேயே உண்டாகின்ற தெளிதல், நிட்டை கூடல், என்னும் நால்வகைச் சாதனங்களால் பெறத்தக்கது என்பதை உணர்ந்து, அதனைப் பெறுதற்குறிய முயற்சியில் ஆண்டவனை அடிமைநெறி, மகன்மைநெறி, தோழமை நெறிகளில் நின்று வழிபட்டுப்பயன் எய்துவது அறிவுடையோர் கடமையாகும்.

சீதப்புனலும் வேதப்பொருளும்

வித்துவான் திருமதி. சு. விஜயசரஸ்வதி அவர்கள்,
தமிழாசிரியை, கோபாலபுரம் மகளிர் உயர்நிலைப்பள்ளி, சென்னை.

——[o]——

மலர் 11 இதழ் 1 "கங்கையும் காசியும்" என்ற கட்டுரையின் தொடர்ச்சி

காசிக்கயிறு கட்டிக்கொண்டவுடன் காசிப்பதியின் வழிபாடு முடிவு பெறுகின்றது. பின்னர் அந்நகரில் முதலாவதாகக் காண வேண்டிய காசிப் பல்கலைக் கழகத்தைப் பார்க்கச் சென்றோம்.

பல நூற்றாண்டுகளாக வடமொழிக் கல்வி ஓங்கி வந்த காசியில், இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பெசன்ட் அம்மையாரால் இந்துக் கல்லூரியாகத் துவக்கப்பட்டது. பண்டித மதன் மோகன மாளவியாவின் பெரு முயற்சியால் கல்லூரி பல்கலைக் கழகமாக வளர்ச்சி யடைந்தது.

காசிப் பல்கலைக் கழகம் கங்கைக் கரையில் 1300 ஏகர் நிலத்தில் அமைந்துள்ளது. இந்துப் பல்கலைக் கழகமாயினும் எல்லா சமய மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப் பெற்றுச் சேர்ந்தே வசிக்கின்றனர். இந்து மாணவர்கள் மட்டும் கட்டாயமாக இந்துமதக் கல்வி பெறக் கடமைப் பட்டுள்ளனர்.

கலைகள், சட்டம், ஆயுர்வேத மருத்துவம், கீழ்நாட்டுக் கலை, கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பக் கல்வி என்ற அறிவுத் துறைகள் உள்ளன. இதன் மேற்பார்வையில் பதினைந்து உறுப்புக் கல்லூரிகளும், மூன்று இணைப்புக் கல்லூரிகளும் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. சுரங்கவேலை, இசை, அழகுக் கலைகள் முதலியவைகளைக் கற்பிக்கத் தனித்தனிக் கல்லூரிகள் உள்ளன.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள், சுமார் அரை லட்சத்திற்குமேல் மூலதனம் வைத்து, இப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தப் பேராசிரியரை நியமித்து, சைவம் பரப்பும் ஒப்புயர்வு - தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும்

இறைவன் - என்ற ஒலிப்பரப்பின் முழக்கம் ஆகும். சைவப் பெருமக்கள் என்றும் இதைப் பாராட்டக் கடமைப்பட்டவர்கள்.

வணிகப் பெருமன்னன் பிர்லா அவர்கள், பல லட்சங்கள் செலவு செய்து, இப்பல்கலைக் கழக மைதானத்தில் 'பிர்லாமந்திர்' என்ற கோயிலைக் கட்டியுள்ளார். வேதக் கருத்துக்களைப் பட விளக்கங்களுடன் சலவைக் கற்களில் பொறித்து, அக்கோயிற் சுவறுகளில் பதித்துள்ளார்கள். புத்தவிகாரங்களில் பெறும் அமைதியும் சூழ்நிலையும் அங்கு நிலவுகின்றன.

பற்பல நாட்டு மன்னர்களால் கட்டப்பட்ட மாணவர் விடுதிகள் வரிசையாக அழகு செய்கின்றன. அங்கு பலநாட்டு மாணவர்கள் பயின்று பெறும் கல்வியை எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கும்.

"துன்னிய கல்வி தோற்றியு மழித்தும்
என்னுடை யிருளை யேறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்..." கீர்த்தித்திருவகவல்

காசிப் பல்கலைக் கழகத்தை முற்றும் சுற்றிக் காண்பித்து விரிவுரை நிகழ்த்தியவாறு எங்களுக்குத் துணை புரிந்த திருமதி லட்சுமி பாரதி, தேசீயக் கவி சுப்பிரமணிய பாரதியாரின் சகோதரியாவர். அன்று பாரதியாரை நாங்கள் கண்டதில்லை; ஆனல் பாரதியாரின் அச்சுப்படியாகிய அம்மையாரை இன்று கண்டோம். அவர்கள் காணும் பொருள், சொல்லும் பொருள் யாவற்றிலும் பாரதியாரின் பாடல்களைப் பாடிப்பாடித் தேசீயக் கவியின் கனவுகளைப் பேசுவார்கள். அவர்கட்குத் தமிழிலும், ஹிந்தியிலும், நல்ல புலமை யுண்டு. காசி அநுமன் கட்டத்தில் இரு தலைமுறையாக வாழ்கின்றவர்கள். அவர்கள் மகனுர் காசிப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வருபவர்கள். ஆகவே பல்கலைக் கழகத்தை நன்கு சுற்றித் தெரிந்து கொள்ள நல்லதொரு வாய்ப்பை எங்கட்கு அளித்தார்கள்.

அன்று இரவு ரயிலில் புறப்பட்டு 18–5–59 காலை அலகாபாத் வந்து சேர்ந்தோம். இந்நகர் அக்பரால் நிர்மாணிக்கப்பட்டது என்று கூறுகின்றனர். (அல்லா = கடவுள்; கா = உடைய; பாத் = நகரம்.) கடவுளுடைய நகரம் என்று முஸ்லீம்களால்

புகழப்படும் இந்நகரம், இந்துக்களால் திரிவேணி சங்கமம், பிரயாகை என்று வழங்கப்படுகிறது. கங்கையும் யமுனையும் கூடுமிடம், கீழாறாக வந்து சரஸ்வதியும் சேருவதால் மூன்று ஆறுகள் கூடுமிடம் என்று காரணம் கூறுவர். இந்த இடம் இந்துக்களுக்கு மிகவும் சிறந்ததொரு புண்ணியத் துறை ஆகும். இங்கு நீராடினோர் சுவர்க்கம் அடைவர் என்பது புராண வழக்கு.

> "Prayag the king of Tirthas
> Triveni Sangam where the
> White waters of Ganges join the
> dark waters of Yamuna." —Swami Chinmayananda.

அலகாபாத் ரயில் நிலையத்திலிருந்து தாராகஞ்ச் என்ற ஆற்றங்கரைப் பகுதி சுமார் இரண்டு மைல் தூரம் உள்ளது. அங்கு செல்வதற்கு டாங்கா வசதிகள் உள்ளன. தாராகஞ்சில் தமிழர்கள் பலர் வசிக்கின்றனர். அவர்களில் மிகவும் புகழும் கண்ணியமும் பெற்றவர் பிரயாகி வெங்கடேச சாஸ்திரி என்பவர் ஆவர். அவர்கள் சிவமடம் என்ற பெரிய சத்திரத்தை அமைத்துத் திரிவேணி சங்கம நீராடலுக்கு வருகின்ற தமிழர்களுக்குத் தொண்டு செய்து வருகின்றார்கள்.

கங்கையும் யமுனையும் சரஸ்வதி நதியும் சேரும் இடமாகிய திரிவேணி சங்கமத்திற்குக் குமரகுருபர அடிகள் பலமுறை சென்று நீராடியவர்கள். அதன் காட்சி அவருடைய உள்ளத்தைக் கவர்ந்தது. கங்கை வெண்ணிறமும், யமுனை கருநீல நிறமும், சரஸ்வதி செந்நிறமும் உடையது. இம்மூன்று நிறங்களும் கலக்கும் பொருள்களைப் பற்றிச் சொல்லுகையில் திரிவேணி சங்கமத்தையே ஒப்புக் கூறுகின்றார்கள்.

திருவாரூர் திருவீதியில் பலவகை மணிகளைப் பதித்த மாடங்கள் விளங்குகின்றன. அந்த மாடங்களில் பதித்த வயிரங்கள் வெண்மையான சோதியை வீசுகின்றன; நீலமணிகள் கருஞ்சுடரை விரிக்கின்றன; மாணிக்கங்கள் செவ்வொளி காலுகின்றன. இம்மூவகைச் சோதியும் திருவாரூர் திருவீதியிலே ஒருங்கு வீசுவதால் அவ்வீதி கங்கை யமுனை சரஸ்வதி நதிகள் சேர்ந்து விளங்கும் திரிவேணி சங்கமத்தைப் போன்றது என்று ஒப்பனை செய்கின்றார்கள்.

"புரிகுழன் மடந்தையர் பொன்னெடு மாடத்
தொண்கதிர் வயிரமும் தண்கதிர் நீலமும்
சேயொளி பரப்புஞ் செம்மணிக் குழாமும்
மாயிரு டுரந்து மழகதி ரெறிப்பச்
சுரநதி முதல வரநதி மூன்றும்
திருவநீண் மறுகிற் செல்வது கடுப்ப..." திருவாரூர்நான்மணிமாலை

திருவாரூரில் சோமாஸ்கந்த மூர்த்தியாக எழுந்தருளியுள்ள தியாகேசப் பெருமானைத் தரிசித்த குமரகுருபர அடிகள், அத் திருக்கோலத்தில் திரிவேணி சங்கமக் காட்சியைக் கண்டு உவக்கின்றார்கள். ஆரூர்ப் பெருமான் திருமேனியிலே கங்கையின் தோற்றத்தையும், உமாதேவியாரின் கோலத்திலே யமுனையின் நிறத்தையும், முருகக் கடவுள் திருவழகிலே சரஸ்வதியின் காட்சியினையும் கண்டு பாடிப் பரவச மடைகின்றார்கள்.

ஆரூர்ப் பெருமானின் திருமேனி செம்மேனி ஆயினும் அவர் பூசிய திருநீறு வெண்பொடி யாகையால் வெண்ணிற முடையதாகத் தோற்றியது. மேலும் ஆரூர்ப் பெருமான் அடியார்களுக்குத் தண்ணளி சுரப்பதால் தண்மை குணம் பெற்றவர். வெண்மையும் தண்மையும் கங்கை நதிக்குரியன. எனவே குமரகுருபர அடிகள் ஆரூர்ப் பெருமானின் தோற்றதைக் கங்கையாக ஒப்பனை செய்தார்கள்.

மரகத வல்லியைப் போன்ற உமாதேவியாரை யமுனையாக ஒப்பனை செய்தார்கள்.

செம்மேனியப்பன் மகன் முருகவேளைச் செந்நிறமுடைய சரஸ்வதியாக ஒப்பனை செய்தார்கள்.

இங்ஙனம் ஆரூர்ப் பெருமானும், உமாதேவியும், முருகவேளும் சேர்ந்த காட்சி, திரிவேணி சங்கமமாக இருத்தலின் மூவரையும் ஒருங்கே தியானிப்போம் என்று பாடிப் பரவசமடைகின்றார்கள்.

குமரகுருபர அடிகள் பாராட்டிய இத்தகையச் சிறப்பு வாய்ந்த திரிவேணி சங்கமத்தில் நீராடும் வாய்ப்பு எங்கட்கும் கிடைத்தது.

(தொடரும்)

THIRUKKOVAIYAR OR LOVE'S PROGRESS
BY
SAINT MANICKAVASAGAR

Professor Thiru G. Subramania Pillai Avergal, M. A., B. L.,
Annamalainagar.

(மலர் 11, இதழ் 2-ன் தொடர்ச்சி)

19. பாங்கனை நினைதல்

பூங்கனை யார்புனற் றென்புலி யூர்புரிந் தம்பலத்து
ளாங்கெனை யாண்டுகோண் டாடும்பிரானடித் தாமரைக்கே
பாங்கனை யானன்ன பண்பனைக் கண்டிப் பரிசுரைத்தால்
ஈங்கெனை யார்தடுப் பார்மடப் பாவையை யெய்துதற்கே.


[Thinks of his Companion: The Hero, deeming it very difficult to approach the Heroine through her maid, is just reminded of his own Companion who can help him with his advice as to how to obtain the Heroine.]

" Who can prevent me win this lady fair,
If I but find and divulge this affair
To my friend, whom like myself I cherish,
And who's devoted to the lotus feet
Of the God, who likes Southern Puliyur,
Where water gurgles and flowers flourish,
And at the Ambalam would stage His dance,
Saving me with a loving graceful glance?"

(Spiritual Allegory: The Soul deems first human knowledge as Sufficient to attain God and Considers it as having equal strength as Divine Grace to know God.)

(to be continued)

விராலிமலைக்கோவில்



படம்:- ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் அவர்கள் உதவியது.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

தமிழன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு !

திருக்குறள் - உரைக்கொத்து

மலிவு அடக்கவிலைப் பதிப்பு

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் திருக்குறள் பதிப்புநிதி வெளியீடு

பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர் உரைகளுடனும் ஆங்கில மொழிபெயர்ப்பும் அடங்கியது.

		பக்கம்	விலை ரூ.	புத்தக அஞ்சல் செலவு	பதிவுப் புத்தக அஞ்சல் செலவு
1.	அறத்துப்பால்	372	1–37	0–32	0–82
2.	பொருட்பால்	816	2–75	0–65	1–15
3.	காமத்துப்பால்	336	1–20	0–29	0–79

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் பெறுவோருக்கு 20% கமிஷன் உண்டு.

கிடைக்குமிடங்கள்:–

1. திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,
 வக்கீல், ஸ்ரீவைகுண்டம்
 (திருநெல்வேலி ஜில்லா)

2. "தியாகராஜ விலாசம்"
 53, பிள்ளையார் கோவில் தெரு,
 திருவல்லிக்கேணி, சென்னை – 5

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

உரைநடை

தருமபுர ஆதீன வித்துவான்,
திருவண்ணாமலை ஆதீனவிரிவுரையரசு, மதுரை ஆதீனச் சித்தாந்த
சைவ வித்தகர், சித்தாந்தப் புலவர்மாமணி, பாலகவி
வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

மலர் 11, இதழ் 2-ன் தொடர்ச்சி

கீற்றுமதி யெனநிலவு தோற்றுபரு
  வத்திலொளி கிளர்நுதற் சேவ்விவவ்வக்
கேண்டைத் தடங்கணு ரேருவிட்
  டிறைஞ்சக் கிடந்தது முடைந்தமுதம்விண்
டூற்றுபுது வெண்கலை யுடுத்துமுழு
  மதியென வுதித்தவம யத்துவம்மை
ஒண்முகத் தொழுகுதிரு வழகைக்
  கவர்ந்துகோண் டோடினது நிற்கமற்றை
மாற்றவ ளோடுங்கேள்வர் மேளலியி
  லுறைந்தது மறந்துனை யழைத்தபொழுதே
மற்றிவள் பெருங்கருணை சோற்றிடக்
  கடவதோ மண்முழுதும் விம்முபுயம்வைத்
தாற்றுமுடி யரசுதவு மரசிளங்
  குமரியுட னம்புலீ யாடவாவே
ஆணிப்போன் வில்லிபுணர் மாணிக்க
  வல்லியுட னம்புலீ யாடவாவே. —65

அட்டமி நாட்பிறையாக நிலவு தோற்றுகின்ற வேளையில் ஒளி வீசுகின்ற நெற்றியழகைக் கவர்ந்து கெண்டை மீனை யொத்த அகன்ற கண்களையுடைய கன்னிப் பெண்கள் எருவிட்டு வணங்க இருந்ததையும் உடைந்து வெளிப்பட்டு அமுதத்தைச் சிந்துகின்ற புதிய வெண்கலைகளையுடைய முழுமதியாகத் தோன்றுகின்ற காலத்திலும் அம்மையினது ஒள்ளிய முகத்திலே ஒழுகுகின்ற

பேரழகைக் கவர்ந்து கொண்டு ஓடியதும் இருக்க; மற்ற மாற்ரு ளாகிய கங்கையோடும் கணவரது சடைமுடியில் வாழ்வதையும் மறந்து உன்னே அழைத்த பொழுதே இவளது பெரிய கருணை சொல்லக் கடவதாயிருக்கிறதா? உலகம் முழுவதையும் பருத்த புயத்திலே வைத்துத் தாங்கிய முடிமன்னனுகிய மலயத்துவச பாண்டியன் தந்த அரசிளங்குமரியோடு சந்திரனே! விளையாட வருவாயாக. ஆணிப் பொன்னுலாகிய மேருமலை வில்லியான சிவபெருமானைக் கலந்திருக்கின்ற மாணிக்கவல்லியோடு சந்திரனே! விளையாட வருவாயாக.

விண்டலம் போலியப் போலிந்திடுதி
யேலுனது வெம்பணிப் பகைவிழுங்கி
விக்கிடக் கக்கிடத் தோக்கிடர்ப்
படுதிவெயில் விரியுஞ் சுடர்ப்பருதியின்
மண்டலம் புக்கனை யிருத்தியேனி
னுேள்ளோளி மழுங்கிட வழுங்கிடுதிபோன்
வளர்சடைக் காட்டேந்தை வைத்திடப்
பேறுதியேல் மாசுணஞ் சுற்றவச்சம்
கோண்டுகண் டுஞ்சா திருப்பது
மருப்போங்கு கோதையிவள் சீறடிகணின்
குடர்குழம் பிடவே குமைப்பதும்
பேறுதியேங் கோமாட்டி பாலடைந்தால்
அண்டபகி ரண்டமு மகண்டமும்
பேறுதியா லம்புலீ யாடவாவே
ஆணிப்போன் வில்லிபுணர் மாணிக்க
வல்லியுட னம்புலீ யாடவாவே. –66

விண்ணிடம் பொலியும்படி அங்கே விளங்குவாயென்ருல் உனது கொடிய பாம்புப்பகை உன்னை விழுங்கி விக்கவும் கக்கவும் உடல் நெருங்கி இடர்ப்படுகின்ருய். வெயில் விரிந்த ஒளியை யுடைய சூரிய மண்டலத்திற் புகுந்து இருப்பாயென்ருல் ஒள்ளிய ஒளி மழுங்கும்படி அங்கே வருந்துகின்ருய். பொன்னிறம் பூத்த சடைக் காட்டிலே எமது தந்தையால் வைத்திடப் பெறுவாயென்ருல் பாம்புகள் சுற்றிலும் இருக்க அஞ்சிக் கண்டுயிலாதிருப்பதும் மணம் வீசுகின்ற கூந்தலையுடைய இவளது சிறிய

பாதங்கள் உனது குடர் குழம்பும்படி குழைவிப்பதும் பெறுகின்ருய். எமது கோமாட்டியாகிய இவள் பக்கத்தில் வந்தால் அண்ட பகிரண்டங்களையும் மற்றெல்லாவற்றையும் பெறுவாய். சந்திரனே! விளையாட வருவாயாக. ஆணிப் பொன்னுலாகிய மேருமலை வில்லியான சிவபெருமானைக் கலந்திருக்கின்ற மாணிக்க வல்லியோடு சந்திரனே! விளையாட வருவாயாக.

எண்ணிப்பல புவனப் பெருந்தட்டை
யூடுருவி யிவள்பெரும் புகழ்நெடுநிலா
எங்கணு நிறைந்திடுவ தங்கதனின்
மேள்ளநீ எள்ளளவு மோண்டுகோண்டு
வேண்ணிலவு போழிவது கிடைத்தனை
மடுத்திவள் விழிக்கடை கோழித்தகருணை
வேள்ளந் திளைத்தாடு பெற்றியாற்
றண்ணளி விளைப்பதும் பெற்றனைகோலாம்
மண்ணிலோண் பைங்கூழ் வளர்ப்பது
னிடத்தம்மை வைத்திடுஞ் சத்தியேகாண்
மற்றேரு சுதந்தர நினக்கேன
விலக்கலை மதிக்கடவு ணீயுமுணர்வாய்
அண்ணலங் களியானை யரசர்கோ
மகளுட னம்புலீ யாடவாவே
ஆணிப்போன் வில்லிபுணர் மாணிக்க
வல்லியுட னம்புலீ யாடவாவே. —67

எண்ணில்லாத பல புவனப் பேரடுக்குகளை ஊடுருவி இவளது பெரிய புகழாகிய நெடிய நிலவு எங்கும் நிறைவதாகும். அங்கே அதனில் மெல்ல நீ எள்ளளவு முகந்துகொண்டு வெள்ளிய நிலவு பொழிவதைப் பெற்ருய். இவளது கண்களில் நிறைந்து கட்கடை கொழித்த கருணை வெள்ளத்தில் திளைத்தாடுகின்ற பேற்றினுல் உலகத்தார்க்குத் தண்ணளி நல்குதற்கும் பெற்ருய். பூமியின் கண்ணே ஒட்பமாகிய பசிய பயிரை வளர்ப்பது உன்னிடத்தில் அம்மை வைத்தருளிய சத்தியினுலேயே யாம். அன்றி உனக்கென ஒரு சுதந்திரமுமில்லை. இதனைக் கலைமதிக் கடவுளாகிய நீயும் உணர்வாய். அழகிய மதக்களிப்புள்ள யானைப் படையை உடையவனுகிய பாண்டிய மன்னன் மகளுடனே சந்திரனே!

விளையாட வருவாயாக. ஆணிப் பொன்னாலாகிய மேருமலை வில்லியான சிவபெருமானைக் கலந்திருக்கின்ற மாணிக்கவல்லி யோடு சந்திரனே! விளையாட வருவாயாக.

முன்பும்ப ரரசுசெய் பெரும்பாவ
முங்கோப மூரிமாத் தொடர்சாபமும்
மும்மைத் தமிழ்ச்செழியன் வெப்போடு
கொடுங்கூனு மோசித்த வித்தலத்தின்
தன்பெருந் தன்மையை உணர்ந்திலைகொல்
சிவராச தானியாய்ச் சீவன்முத்தித்
தலமுமாய்த் துவாதசாந் தத்தலமு
மானதித் தலமித் தலத்தடைதியேல்
மன்பெருங் குரவற் பிழைத்தபா
வமுமற்றை மாமடிக ளிடுசாபமும்
வளரிளம் பருவத்து நரைதிரையு
முதுகூனு மாற்றிடப் பெறுதிகண்டாய்
அன்பரென் புருகக் கசிந்திடு
பசுந்தேனொ டம்புலி யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க
வல்லியுட னம்புலீ யாடவாவே. —68

முன்பு தேவர்கோனாகிய இந்திரன் செய்த பெரிய பாவத்தையும் வலிய வெள்ளை யானையைப் பிடித்திருந்த சாபத்தையும் முத்தமிழ் மன்னனாகிய பாண்டியனது வெப்புநோயுடன் கொடிய கூனையும் நீக்கிய இந்தத் திருத்தலத்தின் பெருமையை நீ உணரவில்லையா? சிவராச தானியாகவும் சீவன் முத்தித் தலமாகவும் துவாத சாந்தத் தலமாகவும் இந்தத் தலம் விளங்குகின்றது. இத்தலத்திற்கு வந்தாயானால் நிலைத்த பெருமையையுடைய ஆசாரியனுக்குக் குற்றஞ்செய்த பாவமும் மாமனாகிய தக்கனிட்ட சாபமும் வளருகின்ற இளம் பருவத்திலே வந்த நரைதிரையும் முற்றிய கூனும் மாற்றப் பெறுவாய். மெய்யன்பர்கள் எலும் புருகக் கசிகின்ற பசிய தேனையொத்தவளாகிய அம்மையோடு சந்திரனே! விளையாட வருவாயாக. ஆணிப் பொன்னாலாகிய மேருமலை வில்லியான சிவபெருமானைக் கலந்திருக்கின்ற மாணிக்கவல்லியோடு சந்திரனே! விளையாட வருவாயாக.

(தொடரும்)

திருமுறைக் காட்சி-27.

திரு. முத்து அவர்கள்.

தொழுவார் வினை வழுவாவண்ணம் அறுமே.

அண்ணுமலை இறைவன் திருவுருவாகவே காட்சியளித்தது சம்பந்தப்பெருமானுக்கு. அதனைக் கண்ணுற் பருகிக் கைதொழுது கலந்து போற்றுங் காதலினுல் பண்ணுலுருகிப் பாடிக்கொண்டே திருத்தலத்தை அடைந்தார். நினைக்க முத்திகிடைக்கும் தலம் திருவண்ணுமலைத் தலம். பகவான் ரமணமகரிஷிகள் அருணுசலம் என்ற சொல்லை ஒருமுறைதான் கேட்டார். அருணுசலனைக் காணவேண்டுமென்ற அவா உள்ளே வளர்ந்துகொண்டு வந்தது. படிக்கும் வயதிலே அருணுசலனைத்தேடிப் புறப்பட்டுவிட்டார். அண்ணுமலையப்பனைக் கண்டார். அவனடியிலே நீங்காது வாழ்ந்து ஆனந்த சோதியானுர்.

சூரியன், பிரதத்ராஜன், அஷ்டவசுக்கள், பிரமதேவன் சந்திரன், திருமால், புளகாதிபன் முதலியோர் பூசித்துப் பேறு பெற்றதலம். திருவண்ணுமலையில் கிரிப்பிரதட்சிணம் முக்கிய மானது. எழுமைல் சுற்றளவுள்ளது. எழுமைல் தூரத்தையும் சுற்றிவரும்போதே எழேழு பிறப்பிற் செய்த வினைகள் யாவும் அகன்று போகின்றன. ஒவ்வோரிடத்தில் நின்று பர்க்கும் போது ஒவ்வோர் விதமாகக் காட்சி அளிப்பது அண்ணுமலை. வித்தியாதரர்களாகிய இருவர் ஒரு ரிஷியின் சாபத்தால் பூனை யாகவும் குதிரையாகவும் இருந்தனிலை, திருவண்ணுமலைக் கிரிப் பிரதட்சணத்தால் மாறினவாம்.

இறைவன் பெயர் அண்ணுமலைநாதர்; அருணுசலேசுவரர் என்றும் கூறுவர். இறைவி பெயர் உண்ணுமுலையம்மை.

"ஆத்மஜோதி" 16-12-'59 மார்கழி இதழில் வெளிவந்துள்ள இக்கட்டுரை, ஆசிரியர் அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டது.

கோயிலுக்கு உள்ளும் வெளியிலும் மலைப்பகுதியிலுமாக 360 தீர்த்தங்கள் உள்ளன. சிவகங்கை, பிரமதீர்த்தம், அக்கினி தீர்த்தம், இந்திர தீர்த்தம் ஆகிய நான்கும் மிகச்சிறந்த தீர்த்தங்களாகும். இத்தலத்தில் நடைபெறும் பெரியவிழா கார்த்திகைத் திருவிழாவாகும். இது கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நாளைத் தீர்த்தமாகக் கொண்டு நடைபெறும். அயனும் மாலும் அகந்தைகொண்டு அடிமுடிதேட அன்னமும் வராகமுமாகப் புறப்பட்டனர். அண்ணாமலையிலே இறைவர் சோதி சொரூபராக விளங்கினர். திருவண்ணாமலைப் பெருமான் அழற்பிழம்பு வடிவுடையராதலால் அவரைச் சேர்பவர்களின் வினைகள் சுட்டு எரிக்கப்படும்.

பிரம விஷ்ணுக்கள் இருபேரும் அறியாமையால் அகந்தையால் அடிமுடி தேடினர். அவர்களது அகந்தை எரிக்கப்பட்டது. பிறவிதோறும் சேர்ந்துவந்த வினைத்தொகை அருணசலப் பெருமானைத் தரிசித்ததால் எரிக்கப்பட்டு விடுகின்றது. முருகன் தாருகனை வதஞ்செய்து வணங்கிச் சென்ற திருத்தலங்கள் பலவற்றுள் இதுவும் ஒன்ருகும். சம்பந்தர், அப்பர், மணிவாசகர் மூவராலும் பாடல் பெற்ற தலமாகும். நக்கீரர், பரணர், கபிலர், பட்டினத்தார் ஆகிய இந்நால்வரும் அண்ணாமலையைப் பற்றிப் பாடிய பாக்கள் பதினோராம் திருமுறையிலுள்ளன. அருணகிரி நாதர், வல்லாள மகாராஜா கோபுரத்திலிருந்து விழுந்து இறக்க எண்ணியபோது முருகன் தோன்றி அருள் செய்தான். குகை நமச்சிவாயர், குரு நமச்சிவாயர் முதலானவர்கள் சித்திபல செய்தனர்.

அகில அண்டங்களையும் ஈன்று காத்தளிக்கும் அன்னை பராசக்தி. சம்பந்தக்குழந்தைக்குப் பாலூட்டிய உமாதேவி, அன்னையாய் விளங்கினும் அவளை மறைகள் கன்னியெனப் பேசுகின்றன. உயிர்களையெல்லாம் ஊட்டுபவள் உண்ணாமுலையாள் எனப் பெயர் பெறுகின்ருள். இறைவன் அம்மையப்பனுகக் காட்சி தருகின்ருன். அழுந்தொறும் அணைக்கும் அன்னையாகவும் அறிவிலாது ஓடி ஓடி விழுந்தொறும் எடுக்கும் அப்பனுகவும் காட்சி தருகின்ருன். உண்ணாமுலையாகிய பார்வதிதேவியோடும் கூட ஒன்ருக எழுந்தருளியுள்ள ஒப்பற்ற இறைவன்

பாதித் திருஉருவம் பெண்ணாக அமைந்தவன். அன்னையும் அப்பனும் தனித்தனி வருதலால் கருணைசெய்யக் காலந்தாழ்க்குமே என்றுகருதி இருவரும் அர்த்தநாரீச்சுர வடிவத்தில் ஒன்றாக வந்து கருணை பாலித்தனர்.

திருவண்ணாமலையிலே அருவிகள் ஓடிவந்து பள்ளத்தே உருண்டு விழுவது போல எம்பெருமான் கருணையும் பக்த கோடிகளை நோக்கி ஓடிவருகின்றது. அருவிக் கூட்டங்கள் இனிய மத்தள ஓசைபோல் ஒலிக்கின்றன. பக்தகோடிகள் பண்ணுடன் உருகிப் பாடும் பாடலுக்கு மத்தள ஓசைபோல் அமைந்துள்ளது. இறைவன் புகழைப் பண்ணுடன் பாடும் பக்தர்களுக்குப் பரிசாக அருவித்திரள் இரத்தினங்களைக் கொண்டுவந்து கொழிக்கின்றது.

அடிமுடி தேடிச் சென்றவர்கள் தமது பெலவீனத்தை அறிந்து இறைவனிடம் சரண் அடைந்தனர். இறைவர் தம் பேற்றையே அவர்களுக்கு அளித்தார். பிறவிதோறும் பிறந்து பிறந்து அலுத்து ஈற்றில் அருணாசலேஸ்வரரை வந்து அடைந்த ஆன்மாக்களுக்கு இறைவன் வினை எஞ்சாமல் அழித்து விடுகிறானும். சம்பந்தப்பெருமான் சொந்த அனுபவத்தில் அருளுகின்றார். நாமும் அவர் வழி நின்று அருணாசலேஸ்வரரை வேண்டுவோமாக.

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே,

பொருள்:– உண்ணாமுலை அம்மையாகிய பார்வதிதேவியாரோடும் கூட ஒன்றாக எழுந்தருளியுள்ள ஒப்பற்றவனான பாதித் திருவுருவம் பெண்ணாக உள்ள பெருமானுடைய மலையாகிய தம்மிடத்தே சிறந்த அழகிய இரத்தினங்கள் விளங்கத் தரையில் விழுகின்ற அருவிக் கூட்டங்கள் இனிய மத்தள ஓசைபோல ஒலிக்கின்ற திருவண்ணாமலையை வணங்குபவர்களுடைய வினைகள் வேருடன் தொடர்பற்றுப்போகும்.

An Outline Of Saiva Siddhanta: Part I

PHILOSOPHY

Sri. S. Satchidanandam Pillai Avergal, B. A., L. T.,

——[o]——

(மலர் 11. இதழ் 2-ன் தொடர்ச்சி)

" யாதோன்று பற்றின் அதனியல் பாய்நின்று பந்தம் அறும் பளிங்
கனைய சித்து நீ
உன்பக்குவம் கண்டு அறிவிக்கும் பான்மையேம் யாம் "

"You are a crystal-like chit which reflects the qualities of that with which it comes in cantact. It is my nature to promote the development of your knowledge with reference to your stage of spiritual evolution" says the Lord according to a famous hymn of St. Tayumanava. Consider also the following yearning of this same great mystic:

" ஆணவத்தோடத்து விதமானபடி, மெய்ஞ்ஞானத்
தாணுவினோடு அத்துவிதம் சாரும் நாள் எந்நாளோ!".

(when will the day come when I shall realise my advaita union (at-one-ment) with the Supreme and unwavering Intelligence, even as I now stand united with Anava mala the principle ignorance and darkness?)

There souls are classified into three groups Vignanakalar, Pralaya kalar and sakalar according to the degree of freedom they have achieved from the bondage of mala or power of darkness. The ordinary trinities of devas right down to the lowest amaeba belong the third or least evolved group of *சகலர்* (sakalar). The second class of souls have Anava and Karma only, and have

bodies and worlds of a much nobler kind than those of the devas. The first class of souls have only Anava still clinging to them i. e. the consciousness of their ego as distinct from the Lord. Elaborate details of the 'bhuvanas' (worlds) where the souls live and the nature of their lives are given - details which we ordinary men can in no way verify.

The 'Pasa' of Saiva Siddhanta is also called 'mala'. It is subdivided in some books into three, and in others into four or five. The division into three is the more common. These are Anava, Karma and Maya. The attributes of each are detailed minutely in Saiva philosophical treatises. Pasa is a really existing thing, and is not a mere illusion. Anava is the principle of ignorance and of the sense of Ahan kara and Mamakara Sense of I and mine. It hides from the soul a knowledge both of itself and of God and souls. Karma is the law or principle which binds souls to the fruit of their actions-good and bad. And Maya is matter in three grades of subtlity. It is the primordeal matter from which all meterial things evolve in creation Sristhi. This matter or maya is subdivided in some of the Upanishads and the Sankhya sutras into 24 tatwas. But in the Sivagamas 12 more tatwas are added. All the 36 tatwas are material in varying states of density. The soul is not identical with these tatwas, although when united to these it feels like one with them. Our body and our mind and all the physical universe that we see are all productions out of this maya or matter. This maya is subdivided into suddha maya, misra maya and asuddha or Prakriti maya. And the 36 tatwas are classified suitably under these three heads.

God stands in advita relation, with Pasu and through it with Pasa also. He is neither the souls nor matter. But He stands in inseparable relation with the two. He envelops them, dwells in them, and moves them but yet transcends them. He is the eternal dancer in every atom and in the mighty universe. As St. Appar says He is the life of the world "உலகுக்கு உயிராயவன் காண்". Still the world or Pasa cannot bind Him or cause any imperfection in Him, as it does with the soul. It is like the poison in the snake which affects not the snake. Sivagnana Siddhiyar states:

" உலகெலாம் ஆகி, வேருய், உடனுமாய், ஒளியாய் ஓங்கி,
அலகிலா உயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்து செல்லத்,
தலைவனுய், இவற்றின் தன்மைதனக் கெய்தல் இன்றித், தானே
நிலவுசீர் அமல னுகி நின்றனன் நீங்காது எங்கும்."

" One with the world and different and both; the Light Transcendent, The Lord who guides souls innumerable, in obedience to His will (and each one's Karma). The Nirmala Being, untouched by the defects of His creatures, Supreme He stands, secondless pervading all".

This relation of non-duality in 'which two distinct entities stand inseparably united is called Adwaita. As stated already, according to Siddhantic thought, God's relation to the souls and matter is of this kind. The relation of soul and body is among the examples furnished in the Agamas. It may be noted in passing that Saiva siddhanta is often wrongly supposed to be Visishtadwaita. It is not Visishtadwaita, not Ekat mavada, but Suddhadwaita.

Highly interesting and subtle discussions are to be found in the Siddhiyar and Sivajnanabodham

with its splendid commentary in Tamil by Sivajnana Swamigal on the meaning of this term 'Adwaita'.

The plan of salvation for the soul is based on the nature of the soul primarily. As remarked already, the soul feels at one with what it is united and it cannot stand alone. It is found first united with mala or Pasa. The Lord's plan to wear out the hold of this principle of darkness by pushing the inner-lying soul into the world of activity-into Samsara-by furnishing it with suitable bodies, inner organs, physical environment and experience of pleasure and pain. Maya or matter is used by the Lord for providing these facilities. Maya gives partial enlightenment, by wearing out gradually the force of darkness clinging to the soul like the verdigris in copper. The power of Icha, Jnana and Kriya Desire Knowledge and will, lying dormant in the soul, are gradually provoked into manifestation. One becomes conscious by degrees of the bondage; the means of liberation and latterly of itself and finally of the Divine Grace and God who has liberated him. Accordingly there are 3 avastas or states, (Kevala Avastha, Sakala Avastha and suddhavastha) for the soul. The pilgrim's progress lies ordinarily through the mineral, the vegetable, the animal and the human kingdoms. God is all the while watching guiding and helping the purification of the soul.

The end of it all in this world is the attainment of the state of the Jeevanmukta. Realisation of God in one's own self and in the world, while yet in the body-that is the Jeevanmukta state. Detailed descriptions are given by perfected souls in this state. Both in this state and in later one, the freed soul

realises its advaita relation with God. The fruit of this salvation is not merely freedom from bondage but also positive sharing of the bliss of the Lord.

There are four padas or well-defined stages in this spiritual ladder which the soul begins to ascend after it is sufficiently evolved to yearn for realisation of God. They are (1) Charya (2) Kriya, (3) Yoga and (4) Gnana. The Divine Grace which has been helping the spiritual evolution by the soul all unknown to itself, through aeons appears as guru 'spiritual Teacher' in human form when the right moment arrives, and points out the way of realising the Supreme, and then disappears. Untill the present prarabda Karma, comes to an end the blessed soul lives in its last material tenement, serving the Lord and fellow beings in thought, word and deed as He directs it, and becoming freed from the mortal coil once for all when the prarabda Karma is exhausted. The Jeevanmukta sees nothing but Sivam everywhere, and in every thing. His words and deeds become God's own. His body and 'anthakaranas' become the Lord's, and are utilised by Him. He does no longer anything on his own account. The Lord is the doer, not the soul in this state. After the soul is freed from the body, it does not cease to exist. But it has been so transformed that it has lost all its consciousness of ego, having voluntarily surrendered it already unto the Lord. It has become perfectly one with the Lord, so that, though it continues to retain its bare existence as of old, it is not conscious of the same. In it all the divine attributes shine. But it does not perform the five great acts of God. It enjoys the Lord'sbliss without any sense of distinction between God, soul and Pasa.

This is the highest stage of salvation. But below this there are 3 others-the saloka, sameepa and sarupa stages. These three are known as Pada Mukthis, and the last and highest as Para Mukti. These three are the fruits enjoyed after bodily death of a person treading of the paths of charya, kriya and Yoga respectively.

From the above it will be clear that it is not the soul's unaided effort, or its knowledge or its cleverness that succeeded in procuring its release from bondage; but it is the Lord's 'Nirheduka Kripa' as the Vaishnavite would name it. The whole process has been inspired and conducted by Divine Grace, which manifests itself as both Arakkarunai and Marak karunai (Grace which helps by means of pleasant and samful experiences) according to the needs of the soul. When through Divine Grace the soul's latent powers are sufficiently roused, it gains in experience and knowledge and learns to yearn for its realisation of at-one-ment with God. That is all the effort it has to make.

By the assertion of its intellect or powers the soul can never realise God who will then recede further from its reach and remain an enigma, because God is Avana manasa kochara, only when the Supreme Lord gives the soul the power to see Him can it do so.

Such in brief outline is the philosophy of Saiva Siddhanta. This part will now be concluded with a statement of its attitude towards other religions and systems of thought. While it claims that it gives the fullest and the truest idea of the reality, nature and means of the highest stage of salvation, it recognises

that all other faiths are also essential for the well being of the world, and that they are also true in their essence so far as they go, and help the spiritual progress of the souls who sincerely tread the paths laid down in them. It is the one and only Supreme Being that is worshipped in them also, though without full and adequate comprehensive of Reality. The various religions are like the steps in a ladder, without which the ladder will be useless. No religion ought therefore to be condemned as false so long as it remains true to its own principles. The famous stanza in Sivajnana Siddhiyar on this point is worthy of quotation: Its translation is given below:

"Religions, postulates and text books are various and conflict with one another. It is asked which is the true religion? Which the true postulate? and which the true book? That is the true religion, postulate and book which, not possessing the fault of calling this true and that false (and not conflicting with them) comprises everything reasonable in its fold. Hence all these are comprised in the Vedas and Sivagamas. And they are imbedded in the sacred Foot of Hara" (Mr. J. M. N. 's translation) (Siddhiyar Sipaksha: VIII-I3). This kind of universal religion is Saivaism. An increasing awareness of the need for mutual understanding and respect in regard to all the great religions of the world is manifest. Several associations have been formed to promote this cause and make religions a rational loving and uniting force. Let us all hope and pray that the ancient mottos like "Under Heaven one family" and "There is but one community and but one God" may be realised in actual life all over the world.

இலக்கியவளம்

"புறம்"

திரு. ப. முத்துக்குமாரசாமி அவர்கள்,
"இளங்கோ இல்லம்" திருப்பராய்த்துறை.

உலகத்தில் இருக்கின்ற அத்துணை மொழிகளைக் காட்டிலும் தலை சிறந்த இலக்கிய இலக்கணங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரே மொழி தமிழ் மொழிதான். ஏனைய உலக மொழிகளில் பயிலப்படுகின்ற இலக்கணங்கள் சொல்லுக்கும் எழுத்துக்கும் மட்டுமே வழிவகுத்துக் கொடுத்தன. ஆனால் நம் அன்னை மொழியாம் அருந் தமிழில் தான் வாழ்வுக்கு இலக்கணம் அமைத்துக் கொடுத்தார்கள் அருந்தமிழ்ப் புலவர்கள். நம்முடைய வாழ்வை அகவாழ்வு; புறவாழ்வு எனப்பிரித்து இவைகளின் பின்னணியில் பல இலக்கண இலக்கியங்களும் வளர்ந்தன, வாழ்ந்தன. புறத்துறை இலக்கியமான புறநானூறு என்ற இலக்கியத்தில் ஓர் செய்யுளை திறனாய்வு செய்வதே இக்கட்டுரையின் உள்நோக்கு. இதோ அச்செய்யுள்:

"யாண்டு பல வாக நரையில வாகுதல்
யாங்காகிய ரென வினவுதிராயின்
மாண்ட வென் மனைவி யோடு மக்களும் நிரம்பினர்
யான் கண்டனை யரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்ற விந்தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழுமூரே"

—புறநானூறு. 191

இந்த செந்தமிழ்ச் செய்யுளைப் பாடிய பாவலர் பிசிராந்தையார் என்ற புலவர் பெருமகனார். ஆண்டால் மூத்த பெருந்தகையாளர். கலைபயில் உள்ளத்தான் மூப்புடைய அறிஞர்.

அறிவாலும் காலத்தாலும் மூப்புடைய முத்தமிழ்க் காவலர். கண்டோர் நோக்குக்கு மூப்புடையவராகத் தெரியவில்லை.

ஆண்டால் மூத்தவர்களை விமர்சனம் செய்வது வெள்ளிமயிர். ஆந்தையாரிடத்திலோ நரையே இல்லை. கண்டவர் கேட்டனர் காரணத்தை. விளித்தவர்களுக்கு விடையளித்த செய்யுளே இச்செய்யுள். முதல் ஈரடிகளும் வினு கேட்டவர்களுக்கு விளித்துக் கூறியது. அதைவிட்டு மூன்றும் அடியாகிய

"மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்"

என்பது மூன்றும் அடி. தமிழகத்து குலமகளிருடைய பண்பை "மாண்ட" என்ற ஒரு சொல் கலங்கரை விளக்குப் போன்று உலகோர்க்கு உணர்த்துகின்றது. கணவன் கைபிடிக்கும் காரிகை யாளின் பண்பு நலனை விளக்கவந்த வள்ளுவப் பெருமான்

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" —குறள் 55

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" —குறள் 56

என்று சொல்லிப் போனுன். பிறிதொரு இடத்தில்

"மனைத்தக்க மாண்புடையாளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" —குறள் 51

என்று வள்ளுவம் வடித்தெடுக்கின்ற குறளிலே "மாண்புடைய" என்றதொரு சொல்லின் திறத்தைத்தான் பிசிராந்தையார் தனது பாவிலே அமைத்தார். "மாண்ட" என்ற சொல்லை மாட்சிமைப் பட்ட இல்லக்கிழத்தி என்ற பொருளை பின்னணியாக வைத்துத் தான் அவர் பாவிலே அமைத்திருக்கின்றார். மாட்சிமைப்பட்ட மனைவி எப்படி இருப்பாள் என்று விளக்கம் கொடுக்கின்றது விநாயகர் புராணம்

"வருவாய்க் கியைய வாழ்த்தலுறு
மறுவில் கற்பின் மனையாற்போல்" —வி. பு. அரசியற் படலம் 20

"மாதர் கற்புடை மங்கையர்க்கோர் மழை"

"காதன் மங்கையர் கற்பினுக்கோர் பெய்யும் மழை"

—விவேகசிந்தாமணி

குறளார் வழங்கிய கருத்துக்களும்; விவேகசிந்தாமணியும், விநாயக புராணம் போன்ற பெருநூல்கள் வடித்தெடுத்த

கற்புடை மகளிரின் பண்புகளை யெல்லாம் ஒருங்கே ஒன்முக ஒரே சொல்லிலே குலமகளிரின் குணநலனை "மாண்ட" என்ற சொல்லால் பகுத்து வைத்தார், பிசிராந்தையார். மனைவியின் மாட்சிமையைப் பேசி முடித்த செந்தமிழ்க்காவலர் மக்கட் பேற்றைப்பற்றி மிக அழகாகப் பாராட்டுகின்ருர். "மக்களும் நிரம்பினர்" மனைவியைப்பற்றி சொல்லால் விளக்கிய பாவலர், மக்களைப்பற்றி பாராட்டும்போது ஓர் உம்மையை வைத்தே பொருள்பட அழகாக விளக்கிப் போந்தார். "மக்களும்" என்ற சொல்லில் உள்ள உம்மையில் ஆயிரம் ஆயிரம் பொருள்கள் பொதிந்து கிடக்கின்றது. அந்தச் சிறப்பும்மையால் கீழே காணும் பல நுண்ணிய பொருள்கள் விளங்குகின்றன. மக்கட்பேறு எல்லோருக்கும் கிடைப்பது அரிது. குழந்தைகள் பல இருந் தாலும் அவர்கள் தங்களுக்குரிய அறிவு; ஆக்கம்; உள்ளத் தூய்மை இவைகள் நிரம்பி இருப்பது அரிது. ஆனல் நமது பாவுடை வேந்தருக்கு வாய்க்கப்பெற்ற மக்கள் பல நல்ல உயரிய உன்னத பல செல்வங்களைப் பெற்று நிறைவுபெற்றிருந்தனர் என்ற செய்தியை அந்த உம்மை உணர்த்துகின்றது. உம்மைக்கும்; அசைக்கும் பொருள்கள் நிறைய உண்டு நமது மொழியில். வேறு எந்த மொழிகளில் இல்லாத தனிச்சிறப்பு நம் அன்னை மொழிக்குண்டு. அடுத்த சொல்லாகிய "நிரம்பினர்" என்ற சொல்லும் ஆழமுடையது. எல்லா ஆக்கத்தாலும் எனது மக்கள் நிறைவுடையவர்கள் என்று பெருமிதம் கொள்கின்ருர். தனது வாழ்வின் வனப்புக்கும், வளத்துக்கும் இன்பத்துக்கும் நிறைவுடைமை நிறைந்த பெருமகிழ்வுக்கும் காரணம் தான்பெற்ற மக்கள் என்று கூறுகின்ருர்.

எல்லா பண்புகளை குறைவுருது பெற்ற மக்களைப் பெற்று பெருமிதம் கொண்டவர்கள் உலக அரங்கிலே ஏராளம். நான் பெற்றெடுத்த மக்களின் காரணமாக துன்பமே என்னை வாட்டாது என்று பெருமைப்பட மேலைநாட்டு இலக்கிய ஆசிரியன் ஒருவன்

"No evil can befall me
By God, I have a son" – Christopher Morley

என்ருன். செகசிற்பியன் என்ற தலைசிறந்த நாவலாசிரியன் சாண் அரசன் என்ற நூலில்

"O Lord, my boy, my Arther, my fair! son
My life, my joy, my food, my all the world
My window - comfort, and my sorrow's cure

– Shakespeare King John III 4.

என்றான். வாழ்வுக்கும்; இன்பத்திற்கும்; உணவுக்கும் உலகுக்குமே பணயமாக செகசிற்பியன் மக்களை மேம்பட்ட பொருளாக மதித்து வாழ்த்தினன். இதைத்தான் பிசிராந்தையார் உட்பொருளாகக் கொண்டு "மக்களும் நிரம்பினர்" என்றார்: அடுத்த அடி,

"யான் கண்டனையரென் இளையரும்" என்பது. இளையர் என்பது பணியாள் என்ற பொருள்படும். இவருடைய பணியாளன் இளமை நிறைந்தவன். உள்ளத் துடிப்பும் உணர்வும் உடையவன். இவருடைய நோக்கைக் கண்டு இன்ன பணி செய்யவேண்டும் என உள்ளக் கருத்துக்கு ஏற்ப நடக்கும் ஏவலர்களை நமது முதுபெரும் புலவர் பெற்றிருந்தார். ஏவலருக்கும், நரை தோன்றாமைக்கும் இணைப்பு உண்டோ என ஐயம் எழுவது உலக இயல். அருந்தமிழ் வளர்த்த ஔவைக்கிழவி

"ஏவா மக்கள் மூவா மருந்து" என்றார். –ஔவை அருந்தமிழ்

நம் புலவரிடத்திலே ஏவல் செய்தோர் ஏவா பணியாளர்களாகவே இருந்தார்கள். பொதுவாக மனிதனுடைய நித்தல் வாழ்விலே (Daily life) குறைவோ, மனக்குறைவோ வருமானல், துன்பமோ காணுமானல் வாழ்விலே சுவை இல்லாது வாழ்ந்தும் வாழாத வாழ்க்கையாக மாறிவிடும். மனித மன இயல் வல்லுனர்கள் மனிதனின் வாழ்க்கையிலே துன்பம் வளர வளர அவனின் வாழ்நாள் குறுகும், குறைவுடைய வாழ்வால் தொல்லையும் துன்பமும் வளரும் என்று கூறுகின்றார்கள். தொல்லைகளும் துன்பங்களும் இல்லாது காக்க வேண்டிய கடப்பாடு பணியாளர்களைப் பொருத்தது. இதைக் குறித்துத்தான்

"மேகமே சேர்கொடை வேந்த மிர்து
சேவகனும், ஆகவே செய்யினமிர்து" சிறுபஞ்சமூலம் –4

"வெங்குருதி மல்க விழுப்புண்ணுகு தொறூஉ
மிங்குலிகஞ் சோரும் வரைபேய்க்கும் — பைங்க

ணினம் போக்கி நின்ருரிகல் வாட்டி வேந்தன்
மனம் போல வந்த மகன்'' புறப்பொருள் வெண்பா-26

மேலே கண்ட இலக்கிய இலக்கணங்கள் பணியாளர்களின் சிறப்பை மாண்பைப் போற்றி வாழ்த்துகின்றன. இத்தகைய ஏவலர்களே நமது புலவர் பெற்றிருந்தார். அடுத்த அடி,

"அரசன் அல்லவை செய்யான்"

என்பது. குற்றமற்ற மாசுமறுவற்ற மாண்புகளே உடையவன் அரசன். தமிழக அரசர்கள் மக்கள் நலனே தனது நலன் எனக் கருதி அரசாட்சி செய்து வந்தார்கள். அரசன் ஏதேச் சதிகாரமாக எதுவும் செய்ய முடியாது. ஐம்பேராயமும்; எண் பேராயமும் நாட்டையும் குடியையும், அரசையும் அமைச்சர் அவையையும் காத்து வந்தன. இந்த இனிய செய்தியை சேரன் தம்பி இசைத்த செந்தமிழ்க் காப்பியமான சிலம்பில்

"ஐம்பெருங் குழுவும் எண்பேர் ஆயமும்" –சிலப்பதிகாரம் 5–157

தெரியக் கிடக்கின்றது. உலகிலே உள்ளோர் உயிராகவும் மன்னன் உடலாகவும் இருந்தான் என்ற புரட்சி மிக்க கருத்தை கன்னித் தமிழ் வளர்த்த கம்பநாடான் தனது காதையில்,

"வயிரவான் பூணணி மடங்கன் மொய்ம்பினுன்
உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலாற்
செயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலா முறைவதோ ருடம்புமாயினுன்" என்று கூறுகின்ருன்.
– கம்பராமாயணம் அரசியற்படலம்.

செய்த குற்றம் தாங்கமாட்டாது தன் உயிர் மாய்த்துக் கொண் டான் பாண்டியன் நெடுஞ்செழியன். எனவே பண்டையிலே வாழ்ந்த தமிழ் அரசர்கள் நீதிக்கும் நேர்மைக்கும் உறுதுணையாக இருந்தார்கள். அதனுல் தான் பிசிராந்தையார் தனது அரசன் துன்பம் செய்யான் என்று தனது பாவிலே "அல்லவை செய் யான்" என்ற தொடரால் விளக்கிப் போந்தார். அரசனின் சிறப்பை,

"மன்னன் உயிர்த்தே மலர்தலே உலகம்" – புற 186

"மன்பதை காக்கும் நன்குடி"–சிலப்பதிகாரம்-காட்சிக்காதை 103

"உறங்கு மாயினும் மன்னவன் தண்ஒளி
கறங்கு தெண்திரை வையகம் காக்குமால்" –சீவகசிந்தாமணி248

"மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கு எல்லாம்
கண்ணும் ஆவியும் ஆம் பெருங் காவலன்" –பெரிய புராணம்
திருநகரச்சிறப்பு 14

"மன்னுயிர் ஞாலக் கின்னு யிரெக்கு மறை" – பெருங்கதை 11

என்பன போன்ற பிற தமிழ் இலக்கியங்கள் வாயிலாக நாம் அரசனின் ஆளும் திறமையை நன்கு உணர்ந்தோம். எனவே ஆந்தையார், அல்லவை செய்யாத உயரிய பண்புடைய அரச ஆட்சியின் குடிமகனுகத் திகழ்ந்த காரணத்தால் அவர் நரை பெறவில்லையாம்.

இறுதியாக ஆந்தையார் உலகு உய்வதற்கும்; தான்நலம் பலகுறையாது வாழ்வதற்கும் காரணம் காட்டுகின்றூர்.

"அதன்றலை ஆன்றவிந்தடங்கிய கொள்கைச்
சான்ருேர் பலர் யான் வாழுமூரே"

என்பது இறுதி அடிகள். இந்த அடிகளிலே "ஆன்றவிந்தடங்கிய" என்ற சொற்ருெடர் இனிப்பதாகும். நாட்டைக் காக்கும் நல்லறம் வளர்த்த சான்ருேர்களின் பண்பை விளக்க வந்த புலவர் பெருமகனுர் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையை உடைய என்று சான்ருேர்களுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுக்கின்றூர். இற்றைக்கு 2000 ஆண்டுகட்கு முன்னர் பாண்டிப் பெருநாட்டை ஆண்டு வந்த இளம்பெருவழுதி என்ற அரசன் நாடு வாழ, அறம் செழிக்க, நீதி வளர உறுதுணையானவர்கள் சான்ருேர்களே என்றுன். இதைத்தான் புறப்பொருள் வளர்த்த புறநானூற்றிலே

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே" – புறநானூறு 182

என்று சான்ருேர்களுக்கு 9 வரிகளிலே பண்புகளை வடித்தெடுத்த கருத்துச் செல்வத்தை ஆந்தையார் தனது பாவிலே "ஆன்று

அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்'' என்ற தொடரால் விளக்கிப் போந்தார். இக்கருத்தை ஒப்புவான் போன்று இன் தமிழ்க் கவிஞர் இளங்கோவடிகளார் தனது காப்பியத்தில்

" அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்ற முயல்வோர்
யாவரும் இல்லாத் தேவர் நன் நாட்டுக்கு
இறைவனாகிய பெருவிறல் வேந்தே "

என அரசாளும் அரசனுக்கு அச்சாணி சான்றோர்கள் என விளக்கியதைக் கண்டோம். "ஆன்ற" என்ற சொல்லில் கல்வி கேள்விகளாற் சிறப்புற்று அறிவு கெழுமிய தலைமகனே ஆன்ற தலைமகனாக மதிக்கப்படுவான். இத்தகைய பெருமக்கள் இயற்கையாகவே பல நுண்ணறிவுகளைப் பெற்றிருக்க வேண்டும். இதைத்தான் மேலைநாட்டுக் கவிஞன்

"Knowledge comes, but wisdom lingers" -Tennyson. என்று சொன்னான். அந்த நுண்ணறிவும் உள்ளத்தின் ஆழத்திலேயிருந்து பிறக்க வேண்டும். அது வேறு எங்கும் பெறும்பண்பு இல்லை என்று Waller Whitman என்ற புலவன் Song of the open Reoad என்ற நூலில் கூறுகின்றான். எனவே பிசிராந்தையார் காலத்துச் சான்றோர்கள் கல்வி கேள்விகளாற் சிறந்து நுண்ணறிவை இயற்கையாகப் பெற்றுத் திகழ்ந்த காரணத்தால் தனக்கு நரை நாடவில்லை எனப்பாடினான்.

இத்தகைய உயிரிய கொள்கைகளைத் தன்னகத்தே வைத்துத் தான் பிசிராந்தையார் கவிதையை யாத்துள்ளார். புறநானூற்றில் உள்ள அத்துணைச் செய்யுட்களும் பல்பொருள் விரித்து பல்சுவை காட்டும் பழந்தமிழ் இலக்கிய மரபுடைய கவிதைகளாகும். அவைகள் யாவும் 2000 ஆண்டுகட்கு முன்னர் நமது பரம்பரையினர் வாழ்ந்த வாழ்வின் விளக்கக் குறிப்புகளே. நமது பழந்தமிழ் இலக்கியங்கள் அந்த உயரிய இலக்கியங்கள் வாழ்க! இந்த இலக்கிய வளம் வளர்த்த தமிழகம் வளர்க! தண்ணொளி வீசும் தமிழர்குலம் ஓங்குக! ஓங்குக!

குறுந்தொகை உவமைச் சிறப்பு

திரு. மது. ச. விமலானந்தம் அவர்கள், எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர், சரபோசி அரசர் கல்லூரி, தஞ்சாவூர்.

சிறிய கிளையில் பெரிய பழம்:

அன்பின் திறத்தை இணைந்த நிலையில் அறிவதைவிட, பிரியும் நிலையிலும் பிரிந்த நிலையிலும்தான் நன்குணரலாம். காதலன் காதலியர் தம் கனிந்த அன்பையும் காதல் நண்பையும் அன்னவர் கூடியிருக்கும் காலத்தினும் ஊடியிருக்கும் காலத்தே தான் உள்ளபடி உணர முடியும். ஏனெனில்

மக்கட்குத் தாய்தன் மணாளனே டாடிய
சுகத்தைச் சொல்லெனிற் சொல்லுமா றெங்ஙனே

என்றபடி இருவருள்ளமும் இயைந்து இன்பம் நுகரும் நிலையில் அவ்வின்ப நிலையை வெளிப்படுத்தவும் இயலாது; தலைவன் தலைவி பால் வைத்த நேயத்தையோ, தலைவி தலைவன்பால் கொண்ட காதலையோ வெளிப்படுத்த வாய்ப்புமில்லை. ஆனால் பிரிவின் போது ஒவ்வொருவரும் வாய்விட்டு அரற்றும் நிலை ஏற்படும். அதுபோது ஒருவர் மற்றொருவர்பால் கொண்ட உயிர் நேயம் உணரப்பெறும்.

அன்றியும் இன்பம் உணரும் தன்மைத்து; துன்பம் உணர்த்தும் தன்மைத்து; இணைந்திருப்பதால் ஏற்படும் இன்பத்தைவிடப் பிரிந்திருத்தலால் வரும் துன்பம் மிகப்பெரிது. இதனைச் செந்தமிழ் நலம் பயில் சிந்தாமணி யாசிரியர், இன்பம் நீர்த்திவலை யளவினது; பிரிவுத் துன்பமோ நீர்ப் பெருக்காம் கடலளவினதென்று கூறுகிறார்:

எரிதலைக் கொண்ட காமத் தின்பநீர்ப் புள்ளியற்றால்
பிரிவின்கட் பிறந்த துன்பம் பெருங்கடலனைய தோன்றால்

இதனல் கூடலில் நிகழும் இன்பத்தினும் பிரிவின்கண் நிகழும் துன்பம் மிகப் பெரிதென்பது அறிந்தோம்.

இம்முறையில்தான் ஒரு தலைவனும் தலைவியும் களவு வழி நின்ற காரணத்தால் கூடிமகிழும் இன்பத்தினும், பிரிந்து வருந்தும் துன்பத்தை அனுபவித்தனர். ஏனெனில் அவர்கள் கூடும் நேரம் குறைவு; பிரிந்து வருந்தும் நேரம் மிகுதி. தலைவன் வந்து வந்து தலைவியைக் கண்டு மகிழ்ந்து திரும்பினன். இதனைக் கண்ணுற்ற தோழி தலைவனைத் திருமணம் செய்து கொண்டு வாழுமாறு கூறினள். தலைவன் செவி சாய்த்தானில்லை. உடனே தோழி தலைவியின் நிலையறியாத தலைவனைத் தெருட்டுமாற்ருன்:

"சிறு மூங்கிலே வேலியாக அமைய, வேரிலேயே பழங்களைக் கொண்ட வேர்ப்பலா விளையும் நாடனே! பக்க மலையில் பலா மரத்தின் மிகச்சிறிய கிளையில் மிகப்பெரிய பழம் தொங்குவது போன்று, உன்பால் உயிரையே வைத்திருக்கும் தலைவியின் உயிரோ மிகமிகச் சிறியது; உன்பால் அவள் கொண்ட காதல் நண்போ மிகமிகப் பெரியது. எனவே செவ்வியறிந்து செயல்படுக" எனக் கூறுகிருள். இதோ பாடல்:

வேரல் வேலி வேர்க்கோள் பலவின்
சாரல் நாட! சேவ்வியை ஆகுமதி;
யார்அஃது அறிந்திசி னேரே; சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தாங்கி யாங்குஇவள்
உயிர்தவச் சிறிது; காமமோ பேரிதே. (குறுந். 18)

இங்கே, தலைவி தலைவன்பால் கொண்ட காதல் பெரிது; உயிர் சிறிது என்பதை உணர்த்த நல்லதோர் உவமையை எடுத்தாள்கின்ருர் புலவர்.

ஒரு பலா மரம்; அம்மரம் சமவெளியில் அமைந்ததன்று; மலைச் சாரலில் விளைந்த பலா. அப்பலா மரத்தின் மிகச்சிறிய மெல்லிய கிளையில் மிகப்பெரிய பருத்த பலாப்பழம் தொங்குகின்றது. மிகச்சிறிய கொம்பில் தாங்கமுடியாத மிகப்பெரிய பழம் தூங்குகின்றதெனில் கேட்கவா வேண்டும்? எந்த நேரம் பழம் இற்று விழுமோ? அறியோம். அன்றிப் பழத்தின் கனத்தைத் தாங்காது கிளையும் முறிதல் கூடும்,

இயல்பிலேயே பாதுகாப்புடையதும், வேரிற் பழுத்தலினுல் கீழே விழும் வாய்ப்பில்லாததுமான பலாப் பழத்தையே பார்த்துப் பழகினவனே தவிர, சிறிய கொம்பில் தூங்கும் பெரிய பழத்தைப் பார்த்தறியான் தலைவன்; ஆயினமையால் அவனுக்கு அறிவு கொளுத்துகின்ருள் தோழி.

கிளைகளில் பலாப் பழங்களைக் கொண்ட மரம்போல் இடையூறு மிக்கது திருமணம் செய்து கொள்ளாமல் அஞ்சி வாழும் களவு வாழ்வு; வேர்களில் பழங்களைக் கொண்ட வேர்ப் பலாப்போல் இடையூறு இல்லாதது திருமணம் செய்து கொண்டு அமைதியாக வாழும் கற்பு வாழ்வு என உணர்த்துகின்ருள்.

கிளையில் தொங்குகின்றமையால் பழங்களைக் கண்டோர் கொண்டு செல்லக் கூடும்; அதுபோல் அழகு நலமும் அறிவுத் திறமும் மிக்க தலைவியை விரும்பி வேறு சிலர் மணந்து செல்லக் கூடும். பாதுகாப்பு இல்லாமையால் பார்ப்போர் பழங்களைப் பறித்துச் செல்ல வாய்ப்பிருப்பதுபோல், தலைவியை வேற்று வரைவினின்றும் பாதுகாப்போர் இலாமையின் பிறர் வரைந்து கொள்ளவும் முயல்வர்.

தலைவி வல்லியனைய மெல்லியல், மிகச்சிறிய கொம்பில் தாங்க வொண்ணுப் பெருங்கனி தூங்குவது போன்று, மெல்லியல் சாயலுடை இந்நல்லியலாள் சிறியளாயினும், தலைவன்பால் கொண்ட பேரன்பு மிகப்பெரிது. முதிர்ந்து கனிந்த பலாப்பழம் கொள்வாரிலராயின் தானே இற்று விழுந்து மலைச் சாரலாதலினுல் சிதைந்து சின்னுபின்ன மாதலுமுண்டு; அஃதேபோல் இவளது காதலும் போற்றுவாரற்றுப் பொன்றிப் போதலும் உண்டு. சிறிய கொம்பில் பெருத்து விளங்கும் பருத்த பலாப் பழத்தைக் காலமறிந்து பறிக்காவிடில் பழு தாங்காமல் கிளை இற்று ஒடியவும் கூடும்; அஃதே போன்று தலைவியின் காதற் பெருங்கனி இன்னும் கனியின் அதனைத் தாங்காது அவளது சிற்றுயிர் பிரிதலும் கூடும். பலாப்பழம் மிகவும் கனிந்து உருகுவதன் முன்னர் ஏற்ற காலத்து உற்ருர் பறித்துப் பயனடைதலே சாலும்; அதுபோலவே தலைவி உயிர் நீப்பதற்கு முன்னம் உரிய பருவத்தே அவளை அவளுக்குரிய தலைவன் வரைந்து கொள்ள வேண்டும் என்பதும், தெரிந்த ஆனல் தெளிவுமிக்க இவ்வுவமையால் தெரியவருகிறது.

இங்கே, மரக்கொம்பை மகளிர்க்கு உவமையாக்கும் தமிழ் மரபு ஒன்றவும், உயிர் அணுவென்றும், சிற்றுயிர் என்றும் கூறப் படுவதற்கேற்பவும் தலைவியின் இளமை நலம் தோன்றவும் தலைவிக்குச் சிறுகோடு (சிறியகிளை) உவமையாயிற்று. அது போன்றே சிற்றுயிர் கொண்ட வேட்கை மிகப் பெரிதென்ப தாலும், அதனை நுகரும் தலைவனுக்குப் பேரின்பம் நல்கும் பெற்றிமை பற்றியும் காமத்திற்குப் பெரும் பழம் உவமையா யிற்று. இனி,

தாம் வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றுரே
காமத்துக் காழில் கனி. எனத் தமிழ் மறையும்,

கன்னிமை கனிந்து முற்றிக் காமுறக் கமழுங் காமத்து
இன்னறுங் கனியைத் துய்ப்பான் ஏந்தலே,

எனச் சிந்தாமணியும் காமத்தை நறுங்கனியாகக் கொண்டது போன்றே குறுந்தொகையிலும் காதற் பெருங்கனி காட்சியளிக் கின்றதென்க.

சிற்றுயிர் பெருங்காதல் கொண்ட நிலையும்; சிறுகோட்டில் பெரும் பழம் விளைந்த கதையும் இணைந்து செல்லும் ஏற்றம் கண்டோம்.

ஆடவனும் ஆடிப்பாவையும்:

தலைவன் காதற் பரத்தையிடம் விடுதலறியா விருப்புற்று அவள் வீட்டிலேயே தங்கிவிட்டான். தலைவி மிகமிக வருந்தி ஞள். வருந்துவதோடன்றித் தன் கணவன் காதற்பரத்தை யிடம் இருப்பதால் அவள் தன்னை மதியாது எள்ளனம் செய்வது கண்டு இதயம் குமுறினுள். நாட்கள் பல நகர்ந்தன.

பன்னுட்களுக்குப் பின்னர் தலைவன் தன்மனை வந்தடைந் தான். வந்தவன் தன் காதற் பரத்தையிடம் செல்லாது ஏனே இங்கேயே தங்கி விட்டான். தலைவிக்கோ சொல்லொணுப் பூரிப்பு. ஏசியும் பேசியும் வந்த காதற் பரத்தையை எள்ளனம் செய்யலானுள்; இகழவும் செய்தாள்.

இஃது எவ்வாறே காதற்பரத்தைக்கு எட்டிற்று. (ஐந்தாம் படைகளும், கோள் சொல்லும் குறுமொழியரும் அக்காலத்

திலும் உண்டுபோலும்!)தாங்கொணுத் துடிப்பு-சினந்தெழுந்தாள். சினமெலாம் தலைவன்மேல்! "என் வீட்டில் இருக்கும்போது நான் மகிழ இனிய மொழி பேசிய தலைவன், தன்வீடு சென்றதும் தன் மனைவியின் மனம் மகிழ ஏற்றது செய்கின்றனனே" மீனுக்குத் தலையையும், பாம்புக்கு வாலையும் காட்டும் செயலைப் போன்றன்றே உள்ளது தலைவன் செயல் என்றெண்ணினள் போலும்!

இங்கே தலைவிக்கேற்ப தலைவன் செயல்படும் திறத்தை உவமை மூலம் உணர்த்துகின்ருர் ஒரு புலவர். நாம் ஆடவும் அசையவும், அதற்கேற்பக் கண்ணுடியில் தோன்றும் நம் உருவமும் ஆடவும் அசையவும் செய்யுமன்ருே? அது போன்றே தலைவிக்குத் தக தலைவனும் ஆடுகிருன் என்கிருர் ஆலங்குடி வங்கனர் எனும் புலவர். இதோ பாடல்:

கழனி மாத்து விளைந்துஉகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்;
எம்இல் பெருமொழி கூறித், தம்இல்
கையும் காலும் தூக்கத் தூங்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கு. (குறுந்–8)

இக்காலத்தும் 'அவள் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான்' என்றும்; 'அவளுக்கு முன்னுலே பம்பரம்போல் ஆடுகிருன்!' என்றும்; அவள் சொல்லுகிறபடி யெல்லாம் ஆடுகிருனே!' என்றும் பெண்வழி இயங்குபவனைக் (Hen - pecked husband) கூறக் காண்கிருேம். இதனையே இலக்கிய மெருகிட்டு இங்கே காண்கிருேம்.

கணவன் கிழத்தியின் விருப்பத்திற்கேற்ப மனம் கோணுது மேவன செய்கின்ருன் என்பதைக் கண்ணுடி முன்னின்று நாம் என்னென்ன செய்கின்ருேமோ அவற்றை அப்படியே செய்யும் கண்ணுடியில் தோன்றும் நம் உருவம்போல, தலைவனும் தலைவிக்கேற்ப ஆடுகிருன் என விளக்கினர். கண்ணுடியில் தோன்றும் உருவம் நாம் என்னென்ன எப்படி எப்படிச் செய்கின்ருேமோ அதேபோல அப்படியே அதே நேரத்தில் இம்மியும் தவருது

செய்கின்றமை போன்றே தலைவனும் கிழத்தியின் கருத்திற்குச் சிறிதும் முரணாது காலந் தாழ்த்தாது செயல்படுகிறானென்பதாம்.

'தன் கணவன் தன் கருத்து வழி அகலாது நிற்பதால்தான் இல்லக்கிழத்தி செருக்குற்று இங்ஙனம் எனைப் புறனுரைக்கலாயிற்று! என்கிறாள் பரத்தை.

இங்ஙனம் கணவன் மனைவிக்கு அடங்கி, மனைவியின் கருத்து வழி இயங்குகின்றான் என்பதை திட்டவட்டமாக - நேர்பட மொழியாது நெளிவு குழைவு தோன்ற உவமை மூலம் உணர்த்திய ஒட்பம் உயர்வுடைத்து.

அழகும் ஆவின்பாலும்:

பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை என்பதனை நன்குணர்ந்த தலைவன் ஒருவன் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச்சென்றான். அன்றிலென ஒன்றியிருந்த தலைவிபிரிவாற்றாமையால் வருந்தினாள்; தலைவனை நினைந்து நினைந்து நைந்தாள், நலிந்தாள் மெலிந்தாள். தலைவியின் பேரழகு கெட்டுப் பசலை வந்துற்றது. இதனைக் கண்ணுற்ற உயிர்த் தோழி, தலைவன் பிரிந்த நிலையிலேயே தலைவியின் நிலை இங்ஙனமெனில் தலைவன் திரும்பி வரும்வரை எவ்வாறு தான் இவள் ஆற்றியிருக்கப் போகின்றாளோ எனக் கவன்றாள்.

தன்பொருட்டுத் தோழிபடும் துயரினைக் கண்ணுற்ற தலைவி, தான் பொறுத்திருந்தாலும் தன் அழகு அழிந்தொழிந்ததே என உளம் நொந்தாள். மாமைக் கவின் மாறிய வருத்தத்தை உவமை மூலம் விளக்குகின்றாள்.

கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது,
நல்ஆன் தீம்பால் நிலத்துஉக் காஅங்கு
எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது,
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குல்என் மாமைக் கவினே. (குறுந் 27)

நல்ல பசுவின் இனிய பால், அப்பசுவின் கன்றுக்கும் உதவாது, கலத்திலும் விழாது நிலத்தில் சிந்தி வீணாவது போல், என்னுடைய அழகு எனக்கும் பயன்படாது. என்னுடைய

தலைவனுக்கும் பயன்படாது பசலை உண்ணப் பெறுகிறது, என்கிறாள் தலைவி.

இங்கே, தலைவி பசுவிற்கும், மாமைக் கவின் பாலுக்கும், தலைவன் கறக்கும் கலத்திற்கும், பசலை உண்ணும் அழகு தரையில் சிந்தும் பாலுக்கும் உவமிக்கப் பட்டுள்ளது. கன்று உண்ட பின் கலத்திலும் நிறையும் பால்; அதுபோல தலைவிக்கும் பயன் பட்டுத் தலைவர்க்கும் நிறைந்த சிறந்த இன்பம் நல்கும் மாமைக் கவின். ஆனால் அந்தோ! ஒருவருக்கும் பயன்படாது தரையில் சிந்துகிறது பால்; பசலையால் உண்ணப் பெறுகிறது மாமை யாகிய பேரழகு. இவ் அவலம் தோன்ற எடுத்துரைத்த புலவர் தம் உவமை ஒட்பமும் மதிநுட்பமும் மாண்புடைத்து.

நஞ்சுண்ட இரட்டைப் பிள்ளையும் நற்றாயும்:

தலைவனும் தலைவியும் பன்னாள் களந்தொழுகினர். அம்பலின் காரணமாகவோ என்னவோ தலைவி இல்லினுள் வைக்கப்பட்டாள்; இற்செறிக்கப் பட்டாள். இச்செய்தியைத் தலைவனுக்கு உணர்த்த எண்ணிய தோழி, "தலைவ! தலைவி இனி வீட்டைவிட்டு வெளிவர இயலாது. ஆகலின் நீ அவளைப் பகலில் வந்து காண்டல் வேண்டா; விரைவில் வரைந்து கொள்ளலே வேண்டப் படுவது" என்றாள். தலைவனோ 'யான் ஆண்டு வந்து இரவுக் குறியில் தலைவியைக் கண்டு செல்வேன்; அப்பால் வரைந்து கொள்வேன்' என்றான்.

தோழிக்கு என் செய்வதெனத் தெரியவில்லை; இராக் காலத்தில் முதலைகள் வாழும் வழியில் வருதல் துன்பம் மிக்கது எனத் தலைவனை வரவேண்டாம் என்றாலோ, தலைவன் வருந்துவான்; அவன் வாராமல் நின்றாலோ பிரிவாற்றாமையால் தலைவி வருந்துவாள். இத்தகைய இக்கட்டான நிலை தோழிக்கு! என் செய்வாள்? எனவேதான் கருத்தை உவமை யொன்றால் உணர்த்துகின்றாள்:

'தலைவ! நீ அன்புமிகுதியால் வருகின்றனை; இவளோ அறியாமை மிகுதியால் அாற்றுகின்றாள்; யானோ இரட்டைக் குழந்தைகள் நஞ்சுண்டால், இரண்டையும் கண்டு வருந்தும் தாய் போல்,

நெஞ்சத்தினுள்ளே இருவர் பொருட்டும் அஞ்சுகின்றேன்; என் செய்கேன் யான் என்கின்றாள். இதோ கவிதை:

கொடுங்கால் முதலைக் கோள்வல் ஏற்றை
வழிவழக்கு அறுக்கும் கானலம் பெருந்துறை
இனமீன் இருங்கழி நீந்தி நீநின்
நயனுடை மையின் வருதி; இவள்தன்
மடனுடை மையின் உயங்கும்; யான்அது
கவைமக நஞ்சுஉண் டாஅங்கு
அஞ்சுவல் பெருமஎன் நெஞ்சத் தானே. (குறுந் 324)

தலைவன் அன்பின் உயர்வாலும் ஆண்மைத் திறத்தாலும் இடையே நேரும் ஏதத்திற்கு அஞ்சாது வருகின்றான்; ஆகலின் அவனைத் தடுத்தலும் தக்கதன்று. தலைவியோ அறியாமை மிகுதியாலும் ஆற்றாமையின் காரணமாகவும் தன் காதலனுக்கு ஏதம் ஏதேனும் நேருமோ என இரங்கி ஏங்குதலின் இரவுக்குறி நேர்தலும் தக்கதன்று. கலந்து மகிழ் காதலர் இருவருக்கும் துன்பமுண்டாம் இவ் இக்கட்டான நிலையில் இரட்டைப் பிள்ளைகள் நஞ்சுண்டால் இருவர் திறத்தும் இரங்கும் தாய்மை யுள்ளம் போலத் தோழியும் இருவர் திறத்தும் இரங்குகின்றாள். தோழியின் துன்ப உள்ளத்தை-துயர நெஞ்சத்தைப் பளிங்கெனக் காட்டுமாறு தெள்ளத் தெளிய தீட்டிக் காட்டியுள்ளார் புலவர்.

எனவே இரண்டு மகவினுக்கும் ஒருசேர ஒருங்கே நஞ்சு நீக்கும் நல்லமருந்து தருதலே தக்கது போன்று, இவ் இருவருக்கும் நலம் பயக்கும் 'வரைவே' ஏற்புடைத்து எனப்பெற வைக்கு மாற்றான் தலைவனை வரைந்து கொள்ளும் மனநிலையினை யுண்டாக்கும் தோழியின் ஆற்றலும் அறிவு ஒட்பமும் அழகு உடைத்து, அருமையுடைத்து,

என்றுமே இன்பம் தருவது ஒப்புமை யாக்கமாகும். (Comparative Study); எனவே இதனை யொட்டி இரண்டொன்று காண்பாம்:

' தலைமகன் பரத்தையர் பலரைத் தான் பெற்று முயங்குதலை விரும்புதலினால் தம் மனையகம் வருகின்றிலன்; ஒருகால் வந்தாலோ தலைவி அவனது நலத்தையுடைய பெருந்தகைமையை

விரும்பித்தான் கொண்ட புலவி நீங்குவாளல்லள், – துனிவிட்டொழிவாளுமல்லள். இத்தலைவி தலைவன் இருவருடைய பகைமையும் என்றுதான் நீங்குமோ? அன்னி, திதியன் என்ற இரு பேரரசர்கள் போர் செய்த குறுக்கை என்ற போர்க்களத்தில் அன்னி என்பான் வெட்டி சாய்த்த புன்னை மரம் மண்ணில் விழுதலும், அம்மன்னர் இருவரின் மாறுப் பகைமையும் முடிந்தொழிந்தாற்போல, இவ்விருவருடைய இகலும் யான் இறந்துபட்டால் என்னொருத்தியொடு நீங்கும் போலும் எனத் தலைவன் வருகைக்கும் தலைவியின் வெறுப்பிற்கும் இடை நின்று வருந்திய (நற்றிணைத்) தோழி வருந்துவதாக வரும் பகுதி ஒருவாறு ஒப்பு நோக்கி மகிழத் தக்கது.

பலர்பெறல் நசைஇநம் இல்வா ரலனே!
மாயோள், நலத்தை நம்பி விடலோல் லாளே!
அன்னியும் பெரியன் அவனும் விழுமிய
இருபெரு வேந்தர் பொருகளத் தொழித்த
புன்னை விழுமம் போல
என்னொடு கழியும்இவ் இருவரது இகலே. (நற்றிணை 180)

இவண், கம்பன் கவித்திறம் கண்டு இன்புறுவாம்: தயரதன் இராமனுக்கு அரசை நல்கி, நற்றவம் புரியத் தாம் காடு செல்வதாகக் கூறியமை கேட்ட அமைச்சரது நிலையை; இராமன் முடி சூடுவான் என்பதால் பொங்கிய உவகையோடும், மன்னவன் பிரிவான் என்பதால் பொன்றிய உள்ளத்தோடும் இரண்டு கன்றுகளுக்கு இரங்கும் பசுப்போன்று துயருற்றனர் எனக் கம்பன் தீட்டிக் காட்டும் உவமையும் இவண் கருதற்பாலது.

திரண்ட தோளினன் இப்படிச் செப்பலும் சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய உவகையர் ஆங்கே,
வெருண்டு மன்னவன் பிரிவெனும் விம்முறு நிலையால்
இரண்டு கன்றினுக்கு இரங்கும்ஓர் ஆவென விருந்தார்.
(கம்ப – அயோத் – மந்திரப்படலம் 34)

உள்ளத்தைத் தொடும், உணர்ச்சியை யூட்டும் இதுபோன்ற உயரிய உவமைகளை நினைந்து நினைந்து நலமுறுவோமாக; நல்ல உள்ளம் பெறுவோமாக.

---

*சுந்தரர் தேவாரம்

கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர்,
வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்,
Research Assistant for Inscriptions,
Dravidian Philology Department, Annamalai University.

அருமையும் பெருமையும் மிக்க தலைவர் அவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! வணக்கம்.

சுந்தரர் இவ்வையக மெல்லாம் ஈடேறவும், செந்தமிழ் தழைத்தோங்கவும், மாற்றம் மனங்கழிய நின்றான் அருளை நிரம்பப்பெற்று, பல அற்புதங்களைச் செய்து சைவ சமயமே மெய்ச் சமயம் என்பதை நிலைநாட்டிய நமது சைவ சமய குரவர் நால்வருள் ஒருவர் ஆவர். இவருக்கு நம்பி ஆரூரர், வன்றொண்டர், தம்பிரான் தோழர், நாவலர் கோன் என்னும் பெயர்கள் திருத் தொண்டர் புராணத்தில் காணப்பெறுகின்றன. திருக்கயிலையில் எம்பெருமான் தமது அழகைக் கண்ணாடியிற் காணும் பொழுது தோற்றிய தோற்றமே அவர் அருளால் சுந்தரராய் வெளிவந்தது என்பர். இதனை "வெருளில் மெய்ம் மொழிவான் நிழல் கூறிய பொருளின் ஆகும்" என்ற திருத்தொண்டர் புராணத்தால் அறியலாகும். இங்குப் பொருளென்றது திருத்தொண்டத் தொகையை. திருவிடைமருதூர் உலாவிலும் மருதவாணர் கண்ணாடி பார்த்தபொழுது சுந்தர மூர்த்திகள் தமக்கு இளவல் (தம்பி) வருமென்று மகிழ்ந்தார் என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் கூறியதும் இங்கு நோக்கற்குரியது. இவர் நரசிங்கமுனையரையரால் வளர்க்கப் பெற்றார். திருப்பரங் குன்றப் பதிகத்தில் "முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே

---

* இது திருவெண்காட்டில், திருவெண்காடர் திருக்கோயிலில் 6–12–'59 ஞாயிறன்று இரவு, உயர் சைவத் திருவாளர் A. உத்தண்ட ராமப் பிள்ளை I. A. S. (சென்னை மாகாண அறநிலைய ஆணையர்) அவர்கள் தலைமையில், அடியேன் நிகழ்த்திய சொற் பெருக்கு.

மொழிந்த" என்று கூறியுள்ளார். எனவே இவர்க்கு நான்கு வேந்தர் சம்பந்தம் உண்டு. இந்த உலகில் அவர்க்குள்ள பெருமையை என்னென்பது?

'சாருந் தவத்துச் சங்கிலிகேள் சாலஎன்பால் அன்புடையான்
மேருவரையின் மேம்பட்ட தவத்தான் வெண்ணெய் நல்லூரில்
யாரும் அறிய யான் ஆள உரியான் உன்னை எனை இரந்தான்
வார்கொள் முலையாய்! நீ அவனை மணத்தால் அணைவாய் மகிழ்ந்
தென்றார்."

என்பதனால் அறியலாம்.

தேவாரம் : விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடையது வாரம் என்னும் இசைப் பாட்டு என்பது சிலப்பதிகாரத்தால் அறிந்தது. ஆகவே தெய்வத்தன்மை மிக்க இன்னிசைப் பாடல் என்பதே தேவாரம் என்ற சொல்லின் பொருளாம்.

சுந்தரர் தேவாரம் : என்பது சுந்தரரது தேவாரம் எனவிரியும். அவர் பாடிய தேவாரப் பதிகங்களிலுள்ள சில நலங்களையே ஈண்டுயான் கூறக் கருதியதாகும். அப்பர் அடிகளைத் தாண்டக வேந்தர் என்பதுபோலச் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தக்கேசி வேந்தர் என்றுகூடக் கூறலாம் என நான் நினைக்கிறேன்.

இனி இவர் பாடலுக்குள் நுழையுங்கால் திருத்தொண்டத் தொகையே நம் கண்முன் தோன்றுகிறது. ஒவ்வொரு நாயன்மார்க்கும் ஒவ்வோர் சிறப்புப் பெரும்பாலும் கூறுகின்றார். ஒருவர்க்கு ஊர், ஒருவர்க்கு மாலை, ஒருவர்க்கு ஆயுதம், ஒருவர்க்கு அவர்தம் அரிய தொண்டு என இவ்வாறு கூறுவது மிகப் போற்றத்தக்கது. அடுத்துத் திருஞான சம்பந்தர், அப்பர், தேவாரங்களைப் போற்றுகின்றார். அது "நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக் கரையரும்பாடிய நற்றமிழ்மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை" (வலிவலம்) என்பதால் அறியலாம்.

திருநாவுக்கரசர் பாடிய பாடலின் தொகையை, "இணைகொள் எழெழு நூறு இரும்பனுவல் ஈன்றவன் திருநாவினுக் கரையன்" (திருநின்றியூர்ப் பதிகம் செ. 2) என்று முதல் முதலில் வெளிப்படுத்தினவர் நம் சுந்தரரே. ஞானசம்பந்தர் தாளம் பெற்றதை,

"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்த னுக்கு உலகவர் முன் தாளம் ஈந்து அவன் பாடலுக்கு இரங்கும் தன்மையாளனை" என்று திருக்கோலக்காப் பதிகத்திலும், ஞானசம்பந்தர் காழியில் ஞானம் பெற்றதை,

"ஊனமில் காழிதன்னுள் உயர்ஞானசம்பந்தர்க் கன்று
ஞானம் அருள்புரிந்தான் நண்ணுமூர் நனிபள்ளியதே"

என்று திருநனி பள்ளிப் பதிகத்திலும், அப்பர்க்கும், சம்பந் தர்க்கும் படிக்காசு கொடுத்ததை,

"திருமிழலை இருந்துநீர் தமிழோடு இசைகேட்டும்
இச்சையால் காசுநித்தம் நல்கினீர்"

என்று திருவீழிமிழலைப் பதிகத்திலும் வெளிப்படுத்தி யுள்ளார். பல கூறுதல் வேண்டாம்.

"நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கரையன்
நாளைப் போவானுங்
கற்றசூதன் நற்சாக்கியன் சிலந்தி கண்ணப்பன் கணம்
புல்ல னென்றிவர்கள்
குற்றஞ்செய்யினுங் குணமெனக் கருதுங் கொள்கை
கண்டு நின்குரை கழலடைந்தேன்
பொற்றிரள் மணிக்கமலங்கள் மலரும் பொய்கைசூழ்
திருப்புன் கூருளானே."

என்ற திருப்பாட்டு ஒன்றே அடியார்களின் வரலாற்று நுட்பங் களை எவ்வாறு அறிவித்திருக்கின்றார் என்பதற்கு உறுசான்றாகும். ஆகையால்தான் சேக்கிழார் இவரை "நுணங்கிய கேள்விமேலோன்" என்றார். ஆராய்ச்சியால் இவைகளை அறிந்து முடிவுகட்ட எவ்வளவு பிரயாசை வேண்டும் பாருங்கள். அப்படி உணர்ந் தவர் ஏன் விரிவாகப் பாடவில்லை என்றால் இறைவன் அருளால் பின்னொருவர் பாடுமாறு அருள் உள்ளத்தால் வரலாற்றை விரித்து உரைத்தார் அல்லர். சுந்தரர் அத்துணையாவது கூறா விடில் பின்னொருவரால் விரிவாகப்பாடமுடியாது. சுந்தரர் பிரயாசைப்பட்டு, ஆராய்ச்சி செய்து பாடினார் என்றால் பொருந் தாது. இறைவன் அருளால் பாடுவித்தார் எனின் "பாட்டு வித்தால்யாரொருவர் பாடாதாரே" என்றபடி எல்லாவற்றையும் பாடியவர் நம்பி ஆரூரர் என்பதில் ஐயமில்லை. ஆதலால்தான் சேக்கிழார்,

"நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம்நிறைந்த மணிகண்டத்
தீசனடியார் பெருமையினை எல்லா உயிரும்தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாசமலர் மென்கழல் வணங்கவந்த பிறப்பை வணங்குவோம்"

என்று தாம் எடுத்த பிறவிக்கே வணக்கம் செய்து கொள்கிறார். இதனால் சேக்கிழார்க்கு நம்பி ஆரூரரிடத்தில் மிக்க பற்று உண்டென்று தெரிகின்றது.

இனி அவர் வரலாற்றுக்கு அகச்சான்று பல இடங்களில் வருகிறது.

ஊர்:- நாதனுக்கு ஊர் நமக்கு ஊர் நரசிங்கமுனையரையன் ஆதரித்தாட் செய்யுமூர் அணிநாவலூர்" என்பதாலும்,

பெயர்:- நம்பி ஆரூரன், ஆரூரன் (திருவெண்ணெய் நல்லூர்ப்பதிகம்) என்பதாலும் அறியலாம். சம்பந்தப்பெருமான் தம்மைப் பந்தனென்று ஒருபுடை கூறல் போல் இவரும் தம்மை ஊரன் (ஆரூரன் என்பதில் ஒரு பகுதி) என்று கூறுகின்றார். அல்லதும் ஊரன் என்ற சொல் மருதநிலத்தலைவரைக் குறிக்கும் எனினுமாம். திருவாரூர் மருதமேயன்றோ? பெயரின் ஒருபுடை கூறலை வடமொழியாளர் நாமைகதேச நாமகரணம் என்பர்.

தாய்:- இசைஞானி என்பதனை "இசைஞானி சிறுவன் (திருவதிகை),

தந்தை:- சடையன் என்பதனை "சடையன் காதலன்' (திருத்தொண்டத்தொகை) என்பவைகளால் அறியலாம். மேலும் இவருடைய தாயாரின் பெயர், "ஆளுடையநம்பி மாதாக்கள் இசை ஞானியார்" என்பதோடு, கமலாபுரியில் (திருவாரூரில்) சைவ கௌதம கோத்திரத்தில் ஞானசிவாசாரியார் குலத்தில் அவர் தோன்றியருளினார் என்பதையும் தென் இந்தியக்கல்வெட்டுத் தொகுதி எட்டு, எண் 485 பக்கம் 301இல் உள்ள திருவாரூர்க் கல்வெட்டு வலியுறுத்துகின்றது. இங்கு மாதாக்கள் என்று உயர்வுப் பன்மையில் கூறியிருப்பது அம்மையாரின் பெருமையை விளக்குவதாகும்.

முன்னைநிலை: திருக்கயிலையில் அணுக்கத் தொண்டராய் இருந்தமை. அது பெரிய புராணம் "வள்ளல் சாத்தும் மதுமலர் மாலையும் அள்ளும் நீறும் எடுத்து அணைவானுளன் என்பதாம்." அதனை "அணுக்க வன்றொண்டன்" என்கிறார். (திருவாவடுதுறை-பண். தக்கேசி. செய்யுள் 10)

தடுத்தாட் கொண்டமை: "வெண்ணெய் நல்லூரில் அற்புதப் பழ ஆவணங்காட்டி அடியனுவென்னையாளது கொண்ட நற் பதத்தை நள்ளாறனை யமுதை"—என்கிறார் (திருநள்ளாறு).

தோழராந் தன்மை பெற்றமை: "ஆத்தமென்றெனை யாளுகந் தானை" (திருக்கோலக்கா—பண். தக்கேசி; "ஊன்றுவதோர் கோல் அருளியுளோம் போகீர் என்றானே"(திருவெண்பாக்கம்);"காணக் கண்ணடியேன் பெற்றவாறே"; என்னும் பகுதிகள் உணர்த்து கின்றன.

ஒப்புமைப் பகுதிகள்: "நாமார்க்கும் குடியல்லோம்" என்னும் திருநாவுக்கரசர் வாக்கைப்போல "திருவும் மெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன் சீருடைக் கழல்களென் றெண்ணி ஒருவரை மதியாதுறுமைகள் செய்தும்" என்று வட திருமுல்லை வாயில் பதிகத்தில் உள்ளது.

"இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை யென்னி னல்லால் விருந்தினனேனை விடுதி கண்டாய்" என்பது திருவாசகம் நீத்தல் விண்ணப்பம். அதனையொப்ப "விற்றுக் கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பி யாட்பட்டேன்" என்பது அமைந்துள்ளது. (திருவாரூர்)

பல் சுவை: தம்மைத் தோழரென்பதற்கு ஏற்பச் சில பகுதிகள் அசதியாடுவது போலக் காணப்படுகின்றன. "வாரூர் முலையாள் பாகங்கொண்டீர் வாழ்ந்து போதீரே" இதில் நீர் மட்டும் பெண்ணாசை மிகுதியால் பாதியுடம்பிலும் வைத்துக் கொள்ளலாம். நான் பெண்ணாசை கொண்டால் கண்ணையிழப் பதோ? நீர் வாழ்ந்து போதீர் என்பது.

மற்றோர் அசதி: "எறுகால் இற்றது இல்லையாய்விடில் எத் துக்கு இங்கிருந்தீர் எம்பிரான் நீரே" (திருமுருகன்பூண்டி)

இங்குத் திருட்டுப் பயல்கள் நிறைய உண்டு. இத்தகைய இடத்தில் நீர் இருப்பதால் உம்மைக் காணவந்த நானும் பறிகொடுத்தேன். என்? வேற்றூர்க்கு நீர் குடிபோனாலென்ன? கால் நோகும் போலும், காளைமாடுள்ளதே. அதற்குக் காலொடிந்துபோக வில்லையே! பின்னை என் இத்திருட்டூரில் குடியிருக்கின்றீர் என்கிறார்.

இனிமற்றோர் நயம்: குண்டையூரில் நெல்மலைமலையாய்க் குவிந்து கிடக்கிறது. அதனைச் சேக்கிழார் பெருமான்

"பேரூர் மற்றத னெல்லை யடங்கவும் நென்மலைப் பிறங்கல்
காரூரும் நெடுவிசும்புங் கரக்கநிறைந் தோங்கியதால்"
(ஏயர்கோன்-14)

"மனிதராலெடுக்கு மெல்லைத்தன்று நென்மலையினோக்கம்"
(ஏயர்கோன்-18)

"விண்ணினையளக்கும் நெல்லின் மலையினை நம்பிநோக்கி"
(ஏயர்கோன்-19)

என்றெல்லாம் கூறுகிறார். இதனை நமது வன்றொண்டப் பெருந்தகை "கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன் ஆளிலையெம்பெருமான் அவையட்டித் தரப்பணியே" என சில நெல்லுப் பெற்றே னென்றே கூறுகிறாரே என்னேயிது! முடிவிலாற்றலுடைய வணுகிய எமது பெருமான் நினைத்த மாத்திரை அணுக்கள் அண்டங்களாகும். அண்டங்கள் அணுக்க ளாகும். ஆயின் அவனுடைய பேராற்றலுக்கும், பேரைசுவரி யத்துக்கும் பேரருளுடைமைக்கும் இது எம் மாத்திரம்? இது ஒரு சிறிதளவே தான் என்னுங்கருத்தாலேயே சில நெல்லுப் பெற்றேனென்றார்.

சமத்காரம்:- இதை ஆங்கிலத்தில் Skill என்பர். சுந்தரர், குண்டையூரில் பெற்ற நெல்லை அட்டித்தரப் பணிப்பாய் என்று வேண்டுகின்றவர்,

"பாதியோர் பெண்ணை வைத்தாய் படருஞ்சடைக்கங்கை வைத்தாய், மாதர் நல்லார் வருத்தம் அது நீயும் அறிதியன்றே"- என்று கங்கை, பார்வதி இருவர்க்கும் மனத்தாபம் இல்லாமல் கூறியுள்ளார்.

" அறுபதும் பத்துமெட்டும் ஆறினோடஞ்சு நான்கும்
துறுபறித் தனைய நோக்கிச் சொல்லிற்றென் ருகச்சொல்லார் "
(திருவாரூர்-பண் இந்தளம்) செ. 3.

இதில் தொண்ணூற்ருறு தத்துவங்களைப்பற்றிச் சொல்ல வேண்டும், 96 கிடைக்கவில்லை. எட்டும் என்பதற்குப் பொருந்தும் என்று பொருள் கொண்டால் தொண்ணூற்ருறு கிடைத்துவிடும்.

குறிப்பு:- இப்பொருளை அடியேனுக்கு முதற்கண் தெரிவித்தவர் நலமிகு புலமை மிக்க நாவலர். நாட்டார் அவர்களாவர்.

இயற்கை வருணனை:- ஞானசம்பந்தரைப் போல் இயற்கை வருணனையை இவர் மிகுதியாய்ப் பாடவில்லை எனினும் சில இடங்களில் மிக்க சுவை பயக்கிறது. மாமரத்துத் தளிரின் தன்மை செக்கச் செவேல் என்றிருக்கும். இதனை "சீதப்புன லுண்டு எரியைக் காலும் சூதப்பொழில் சூழ் சோற்றுத் துறையே" என்கின்ருர்.

பிறநலங்கள்:- சிவாநுபவ இன்பத்தை கற்ற கல்வியினும் இனியானை என்ற பாசுரத்தால் கல்விச் சுவையோடு ஒருபுடை யொப்பிடுகிருர். திருநின்றியூர்ப்பதிகத்தில்,

" திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும் செல்வத்
தென்திருநின்றி யூரானே " -(பண் தக்கேசி)

என்று சொல்கின்ருர். பொருள் இலக்கணம் தமிழுக்கே உரியது. இங்கே சொல் அமைந்திருக்கும் பகுதி பாராட்டற்குரியது. இடையருது அங்குள்ளார் தமிழ் ஆராய்ச்சி செய்ததனுல் அல்லவா? கிளியும் சொல்கிறது. இங்கே செல்வம் என்பதற்குக் கல்வி என்பது பொருள்.

'வழுக்கி விழினும் திருப்பெயர் அல்லால் மற்று நான் அறியேன் மறுமாற்றம்' என்பது, இறைவனிடத்தில் அவர் மனம் பற்றியிருந்த விதத்தைத் தெள்ளிதில் புலப்படுத்துகின்றது. இறைவனை நினைந்து உருகிஉருகிப் பாடல்களைப் பாடியவடலூர் வள்ளலார்,

" தேன்படிக்குமமு தாமுன்றிருப் பாட்டைத் தினந்தோறு
நான்படிக்கும் போதென்னை நானறியேனு வொன்ருே

> வூன்படிக்குமுளம் படிக்கு முயிர்படிக்கு முயிர்க்குயிருந்
> தான்படிக்கு மநுபவங் காண்டனிக்கருணைப் பெருந்தகையே"

என்று கூறியிருப்பரேல், இச்சுந்தரர் தேவாரத்தின் பெருமையை என்னென்று கூறுவது?

முடிப்புரை:- சுந்தரர் திருவருள் தோற்றுவித்த துணையானே ஒருசில நலங்களை ஈண்டுக் கூறினேன். குற்றம் களைந்து குறைபெய்து கொள்ளுதல் கற்றறிந்தாராகிய தங்கள் கடமையாகும். இங்குப் பத்திரகாளியம்மனுக்குப் புதிதாக வெள்ளிக் கவசம் செய்து சாத்தியருளும் இந்நாளில், பலபக்கங்களிலிருந்தும் திரளாக வந்திருந்து அடியேனுடைய சொற்பொழிவைக் கேட்டருளிய உங்கள் அனைவர்க்கும் அடியேனுடைய நன்றி கலந்த வணக்கம் உரியதாகும். தலைவர் அவர்களையும் இங்கு எழுந்தருளியிருக்கும் அவர்கள் கற்பிற் சிறந்த மனைவியாரையும், நினைக்கும்பொழுது, கோயில் திருவிசைப்பாப் பதிகம் பாடிய கண்டராதித்த சோழதேவர், அவருடைய சைவப்பற்று மிக்குள்ள செம்பியன் மாதேவியார் இவர்களுடைய நினைவே என் கருத்தில் உதிக்கின்றது. தருமபுர ஆதீனத்து 25 ஆம் பட்டத்து ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள், தங்கள் அருளாட்சிக்கு உட்பட்ட இருபத்தேழு தேவஸ்தானங்களை நன்கு புரந்துவருவது போல், இக்கோயிலும் இக்கோயில் டிரஸ்டிகளால் நன்கு கண்காணிக்கப்படுவதைப் பார்க்கப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இங்கே, வேயன்ன தோளி நாச்சியாருடனாகிய திருவெண்காடரை வழிபடவும், அகோரத் திருமேனி, பத்திரகாளி யம்மன் இவர்களுக்கு நடந்தேறிய அபிடேக ஆராதனைகளைக் கண்டு பெருவாழ்வு அடையவும் செய்த இக்கோயில் டிரஸ்டிபோர்டு தலைவர் வக்கீல் துரை அவர்களை என்றென்றும் மறவேன். இக்கோயில் டிரஸ்டி, உயர்திரு. K. கனகசபைப் பிள்ளை அவர்களும், கோயில் நிர்வாக அதிகாரி திரு. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களும் அடியேன் பால் பேரன்பு காட்டினர். அவர்களுக்கு என் நன்றி உரியதாகும். இக்கோயில் கல்வெட்டு நன்கு புரக்கப்பட்டு வருவதை நோக்கப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

புழுக் குரம்பை

திரு. க. திருநாவுக்கரசு அவர்கள், II U. C.
செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

உலகில் மனிதன் பிறந்தது முதல் இறக்கும்வரை நல்வாழ்வு வாழ்வான் வேண்டி பொன்னும் பொருளும் சேமிக்கிறான். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லையென எண்ணுகிறான்! ஆனால் அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லையே! ஆகலின் ஆண்டவன் திருவடியினைப் பற்றி நிலையாமையைத் தெளிந்து வீடுபேறு பெற முயற்சிப்போம். நிலையாமை யாவது யாது?– என்ற கேள்விக்கு விடையிறுக்கிறார் உலகப் பொதுமறை திருக்குறள் உரையாசிரியர் பரிதியார். "நிலையாமை யாவது செல்வம், யாக்கை, இளமை இவை நிலையல்ல"–என்று உரை எழுதிப் போந்தார்.

"இன்ப முண்டேல் துன்ப முண்டு"–என்று ஆரூர்ப் பெருந்தகை சுந்தரர் தன் தேவாரத்தில் தேனமுத மொழியால் தெரிவிக்கிறார். பிறிதோரிடத்தில் அதே சுந்தரர் பெருமான் "தோற்றம் உண்டேல் மரணம் உண்டு"–என்று நமக்கு உரைக்கின்றார். இக் கருத்துப்பட மரணம் யாவர்க்கும் உறுதியென ஆங்கில மகாக் கவி ஷேக்ஸ்பியர் கூட

Death is certain to all; All shall die. [–Shakespeare.]
என்று கூறினர்.

பாரதி பாராட்டிய மூவருள் ஒருவர் சொல்லேருழவர்–சேர நாட்டின் செம்மல்–கனக விசயன் தலையில் கல்லேற்றிய சேரன் செங்குட்டுவன் உடன் பிறந்தவன் இளங்கோவடிகள் தன் சிலம்புக் காதையிலே–.

இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது; ஒல்லுவது ஒழியாது;
செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்!
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கு. —சிலப்பதிகாரம்,

—என்று உறுதுணை தேடி வாழ வழிவகை கூறினர். ஆகவேதான் நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவாண்மை இழிந்தது என்றியம்பினர் வள்ளுவர்பிரான்.

"வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும் கட்டிலிலும் வைத்து நம்மை நந்தாய் அன்புகூர்ந்து தேனமுதப் பால், சங்கிலே ஊட்டுகிறாள். அது முதற் சங்கு. சுற்றத்தினரும் நட்பினரும் சூழ வந்திருந்து மொய் குழலார் மங்கையை நாம் திருமணம் செய்யுங்கால் திருமண வாத்தியங்களுள் ஒன்றாக இடைச் சங்கு முழங்குகிறது. இறுதியாக நாம் சாவைப் பிடித்தவுடன் நம்மை எமனுலகம் அனுப்ப ஈமச் சடங்குசெய்யும் நேரத்தில் கடைச் சங்கு ஊதப்படுகிறது"—என்று இப்புழுக் கூட்டின் நிலையாமை பற்றிப் பட்டினத்தார் பாடல் ஒன்று பறை சாற்றுகின்றது.

— மனங்கொண்டீண்டு
உண்டுண்டுண் டென்னும் உணர்வினாற் சாற்றுமே
டொண் டொண்டொண் டென்னும் பறை. [—நாலடியார் 25]

இவ்வுலகத்தில் நிச்சயமாக இன்பம் உள்ளது உள்ளது உள்ளது என்று நிலைத்து மயங்குகின்ற சிற்றறிவுடையவனைக் குறித்துச் சாப்பறை டொண் டொண் டொண் என்று முழங்குகிறது. —என்று நாலடியார் பாடல் ஒன்று யாக்கை நிலையாமை பற்றி நவிலுகிறது.

தசையும் எலும்பும் இரத்தமும் நீரும் சேர்ந்த இப்புழுக் குரம்பையினில் – பொய்க் கூட்டினில் பசி ஏற்பட்டுவிட்டாலோ மனிதன் தன் நிலை எல்லாவற்றையும் மறந்து விடுகிறான். இது பற்றியே சான்றோர் 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்'— என்றனர். பசியின் கடந்த நிலைபற்றி மணிமேகலை என்னும் காவியம் கூறுவதைக் கேளுங்கள்.

"குடிப்பிறப்பு அழிக்கும்; விழுப்பம் கொல்லும்;
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்;
நாண் அணிகளையும்; மாண் எழில் சிதைக்கும்;
பூண் முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்;
பசிப்பிணி என்னும் பாவி"

இப் பசிப்பிணி என்னும் பாவியானது இவ்யாக்கையினை எந்த அளவுக்குக் கொண்டுயக்கிறதென்று காணுங்கள். பகலிரவு என்று பாராதுப் பாதுகாத்து உடலை வளர்ப்பினும் இறுதியில் - பிடி சாம்பலாவது கண்டு தெளிந்துதான் ஆன்றவிந்த பெரியார் பலர் வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம் என்று கூறினார்களோ?

இன்னும் இப்புழுக் கூட்டினைப் பற்றியும் இதன் நிலையாமை பற்றியும் எத்தனை எத்தனை புலவர் பெருமக்கள் கூறியுள்ளனர். முப்பாலில் நாற்பால் மொழிந்த திருவள்ளுவர் பெருமான் உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு பற்றிக் கூறுகிறார்.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.

மேற்கண்ட குறளுக்கு உரைகண்ட மணக்குடவர் "கூடு தனியே கிடக்கப் புள்ளுப் பறந்து போனாற் போலும், உடம்போடு உயிர்க்கு நட்பு" -என்று கூறி முடித்தார். இதே கருத்துப்பட நாலடியார் பாவொன்று கூறுவதைக் காண்போம்,

கேளாதே வந்து கிளைகளாய் இல்தோன்றி
வாளாதே போவரால் மாந்தர்காள் — வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து —நாலடியார்.30

இப் பாடலிலும் உயிரானது தன் இருப்பிடமான உடலை விட்டுச் செல்வது கூட்டைவிட்டுப் புள் பறந்து செல்வதை ஒக்கும் என்று கூறுகிறது. மேற் கூறிய இரு பாடல்களும் உடலின் நிலையும் உயிரின் நிலையும் இதுவென நமக்கு அறிவிக்கிறது. இப் பாடல்களும் யாக்கையின் நிலையாமை யினையே வற்புறுத்துகின்றன. இன்னும் பட்டினத்தார் தம் திருப்பாடல் ஒன்றில்:

"இடும்பையும் பிணியும் இடுக்கிய ஆக்கையை
உயிர்எனுங் குருகுவிட்டு ஓடுங் குரம்பையை
எலும்பொடு நரம்புகொண்டு இடையில் பிணித்துக்
கொழுந்தசை வேய்ந்தும் ஒழுக்குவிழுங் குடிலை
செழும்பெழு உதிரச் சிறுபுழுக் குரம்பையை"

–என்று யாக்கையின் இழிநிலை பற்றித் தெளிவாக்கி இமையா நாட்டத்து இறையே! அடைக்கலம். அடியார்க்கு எளியாய்! அடைக்கலம் என்றுகூறி ஆண்டவன் றன் றிருவடியில் அடைக் கலம் ஆயினர்.

"முடைவிடாது அடியேன் மூத்தற மண்ணுய் முழுப் புழுக் குரம்பையிற் கிடந்து கடைபடா வண்ணம் காத்தல் வேண்டும்" என்று மாணிக்க வாசகரும் கற்றதனாலாய பயன் அறிந்து இறைவன் தாள்தனைச் சிக்கெனப் பிடித்துய்ய விழைகிறர்.

இப்படி நாவீறு படைத்த நல்லிசைப் புலவர்கள் பலர் இப் புழுக் குரம்பையின் நிலையாமைபற்றி மக்கட்கு எடுத்துக் கூறியுள்ளனர். ஆதலின் நாம் பற்றற்ற நிலையினைப் பற்றி பற்றற்ருன் தில்லையம்பலத்துள் குனித்த புருவத்தினையும் கொவ் வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பினையும் கொண்டு நம்மைக் கூவி அழைக்கிருர்; வாருங்கள். அப்பற்றற்ருன் பற்றினைப் பற்றி உய்வோம்! அவர் தம் மலர்மிசை ஏகி மாணடி சேர்ந்து மாண் புடன் இருப்போம் வாருங்கள்! வாருங்கள்!!

சிதம்பரத்தில் மார்கழித் திருத் தேர்விழா மகேசுவரபூசை நிதி சேமவைப்பு ரூ. 5000/-

"பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாம நீர் வரைப்பின் நானில வளாகமும்,
ஏனைப் புவனமும் எண்ணிங் குயிரும்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையும் காப்பதுன் அமைத்தபொற் கரமே
தோற்றுபு நின்ற அத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவ தாரழல் வைத்ததோர் கரமே
ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் நற்றத்துநின்று
ஊட்டுவ தாகும் நின் ஊன்றிய பதமே
அடுத்தவின் னுயிர்கட் களவில் பேரின்பம்
கொடுப்பது முதவ நின்குஞ்சித பதமே."

என்று நடராசப்பெருமானின் திருநடனக் கோலத்தில் ஐந் தொழில் நடத்தும் குறிப்பினைப் பாடிச் 'சென்றவனைத் தாமாக் கும் தில்லைச் சிற்றம்பலம்–கூடும் கதியொரு காற்கும்பிட்டாற் போதும்' என்று ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளியதற்கேற்ப அணிதிரை யாதிரை நாளில் அமரர் குழாத்தினில் நாராயணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும் திசையனைத்தும் நிறைந்த பாரார் தொல் புகழ் பாடியும் ஆடியும் தோரார் வீதியில் பல்லாண்டு கூறியும் தேர்த் திருவிழாவைத் தரிசித்துச் சீருந் திருவும் பொலிந்த பேறுபெறும் மார்கழித் திருவாதிரைத் தேர்த் திருவிழாவன்று சிதம்பரத்தில் மகேசுவரபூசை நடத்துதற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப் பெற்றது. இது 'சிதம்பரத்தில் மார்கழித் திருத் தேர்விழா மகேசுவரபூசை நிதி' எனப்பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5000/- ரூபா ஐயாயிரம். இது ஆண்டொன்றுக்கு ரூ. 100/-க்கு ரூ. 3/- வீதம் வட்டி

தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்யப்பெற்று உள்ளது. 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946 ஸ்டாக் சர்டிபிகேட் எண். எம்எஸ். 3178. ரூ. 5000/- இந்நிதி நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப் பெற்றுவரும்.

3. ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருமானம் முழுவதும் சிதம்பரத்தில் நடராசப் பெருமானின் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் தேர்த் திருவிழாவன்று சிதம்பரத்தில் நமது காசிமடத்தில் மகேசுவரபூசை நடத்தப்பயன் படுத்தப்பெறும்.

4. வட்டி வருமானத்துக்கு ஏற்பவும் கால விலைக்கு ஏற்பவும் நம்மால் தயாரிக்கப் பெறும் திட்ட ஜாப்தாவின்படி இவ்வன்னம்பாலிப்பு நடத்தப்பெறும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலும் பயன்படுத்தப் பெறமாட்டாது. இந்நிதி நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும்.

திருப்பனந்தாள்
28-3-1958 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur Sub Registrar's office as No. 12 of 1958 Book 4; volume 47 pages 69 to 71 dated 29-3-1958.

1135-ம் ஞ மார்கழி, தை மாதங்களில்

கலைக்கோவிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
7062 to 64	திருஞானசம்பந்தர் வரலாறு (ஆங்கிலம்)	ஸ்ரீ குமரகுருபரன் சங்கம் ஸ்ரீவைகுண்டம்.
7065	திருவருட் பிரகாசவள்ளற் பெருமாள் அருளிய சென்னை கந்தகோட்டக் கந்தவேள் தெய்வமணிமாலை	பாப்புலர் டிரான்ஸ் போர்ட்டு, சென்னை I.
7066 to 67	தேவாரத் தல வணக்கம்	சிவநேசர் திருக்கூட்டம் காரைக்குடி.
7068 to 70	ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 61 வது ஜன்ம நட்சத்திர வெளியீடு	தெ. மரகதசுப்பிரமணிய பிள்ளை அம்பாசமுத்திரம்.
7071 & 72	திருமாதேசுரர் வரலாறு என்னும் மாதேசுரன் மலைவழி நடைக்கும்மி	திரு. ஆ. அரங்கநாதன் ஆலாம்பாளையம்.
7073	ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஜெம்புகேஸ்வர சுவாமி தேவஸ்தானம்	வாரவழிபாடு வெளியீடு பெருநிலக்கிழார் திரு. T. A. T. குஞ்சுப்பிள்ளை-ஒமாந்தூர்.
7074	ஏரகப்படி விழாமலர் திருஅருட்பா-முருகன் தோத்திரப் பாடல்கள்	ம. கோ. துளசி அய்யா நாயக்கர்-வள்ளலார் அடிமை, சுவாமி மலை.

7075	திருமுருகன் எம்பாவை திருப்பள்ளி எழுச்சி திருப் பல்லாண்டு பக்திர சக்கீர்த்தனம்	A. R. சுப்பையர் மதுரை.
7076 to 77	திருக்கஞ்சனூர் சப்த ஸ்தல பதிகங்கள்	திரு. J. M. சின்னசாமி செட்டியார், ஜவுளி வியாபாரம் செயம்கொண்டம்.
7078 to 82	His Holiness Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal, Head of Kasi Mutt, Tirupanandal-Mahant of Kumara sawmy Mutt Kedar ghat-Varanasi	The sixty-First Brithday celebration committee, Varnasi.
7083	Kanchi Temples guide (Brief History)	Ganapathi Vasagasalai 92 Kamatchi Amman Sannathi Street, Kanchipuram.
7084 to 86	Religions of the Tamils Past &Present	K. Ramachandra Managing Editor Religious Digest Jayanthipura Talangame-Ceylon.
7087	Essence of Ramayana	Sri Swami Sivananda.
7088 to 92	Readers Digest March 1959	The Readers Digist Association Std 25 Barkeley Square London U I
7093	Sri Kumaragurupara Swamigal High School Aduthurai–Catalogue of Library Book Vol I	Sri K. G. S. High School Aduthurai.
7094	Do Vol II	Do
7095	Essays on Bharati	Bharati Tamil Sangam Calcutta.

7096	Tamil Culture vol II No. 4. October 58 Journal of the Academy of Tamil Culture	Mr. C. Amirta ganesan for Academy of Tamil culture Madras 7.
7097	Do vol NII. No. 1 Jan - March 59	Do
7098	Do vol VII No. 3 July 58	Do
7099	La Vie Et L'organisation- Des Communantes Boddhiques Modernes-De Ceylon	Andre Bareaw Institut Francais D'indologie Pondicherry.
7100	Tiruvalluvar Kalai Manram, Howrah Kalai Malai–1958	Thiruvalluvar Kalai Manram 157 Rama Krishnapur Lane Silepore Howrah
7101	Bharati Jayanti Sowvenir Dr. K. S. Krishnan Diamond Jubilee Malar December 1958	Bharati Tamil Sangam, Calcutta.
7102	Viveka The Vivekananda College Magazine	K. Vasudevan, Professor Vivekananda College Mylapore, Madras.
7103	The Journal of the Tanjore Sarasvati Mahal Library vol. XII No. 3	The Saraswathi Mahal Libray Tanjore.
7104	Do Vol. XIII No. 1	Do
7105	சைவ வழிபாடு	R. G. Nallakuttalam Pillai Pillaiyakam Rajapalayam.
7106 to 15	ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவிளையாடல் கருணை திருவிருத்தம்	மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூல்நிலையம் அடையாறு சென்னை.

7116 to 17	சமஸ்கிருதம்-குஞ்சிதாங்கிரிஸ்தவம்	பிரம்மஸ்ரீ க. மீ. ராஜகணேசதீக்ஷிதர் ஸ்ரீ நடராஜ வித்யாலய சிதம்பரம்.
7118	சமஸ்கிருதம்-உத்திரஸ்டகணபதி அஷ்டோத்திர சதநாமாவளி.	சுந்தரேச சர்மா west Main Street Tanjore.
7119	சமஸ்கிருதம் உத்திரஸ்ட கணபதி அஷ்டோத்திர சதநமாவளி	Do
7120	ஸ்ரீ சிவபக்த விலாசம்	கருங்குளம் பிரம்மஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரி.
7121 to 32	மகா கயிலாய யாத்திரை	தருமை யாதீனம்.
7133	Tamil culture (Journal of the Academy of Tamil culture Vol III No. 2 April & June 1959	Published by Mr. C. Amirtaganesan for Academy of Tamil Culture Madras 7.
7134 to 38	காசிவாசி அருணந்தி அடிகள் நான்மணிமாலை	ஆசிராம் சு. பாலசுப்ரமணிய பிள்ளை அவர்களின் மக்கள்.
7139 to 42	நவமணிகள்	திருவாவடுதுறை ஆதீனம்.
7143 to 46	திருமுண்டீச்சரத் திருப்பதிகம்	தருமபுர ஆதீனம்
7147 to 51	திருநெல்வெண்ணெய் திருப்பதிகம்	தருமபுர ஆதீனம்.
7152	குமாரகுருபரன் 1959ம் வருஷத்து 1 முதல் 12 முடிய இதழ்கள் மலர் 10 இதழ்கள் 12 பவுண்டு வால்யூம்	Presented by Doctor Mr. Venkatasubramanian L. M. I. Srivaikuntam,
7153	The readers' Digest Jan - 60	The readers Digest Assocation Std Bombay.
7154 to 55	ஞானவரண விளக்கமும் மாபாடியமும் சுபக்கம்-நான்காம் பக்கம் (சாதாரண பைண்ட்)	தருமை யாதீனம்.

(தொடரும்)

திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்'

		ரூ. ந. பை.
1	விநாயகர் திருமுறை	0 06
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன்	6 00
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	3 00
4	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும்)	2 50
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,, ...	2 25
6*	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ,, ...	1 30
7*	திருவாசகம் (புதிய பதிப்பு) ,, ...	0 50
8*	திருக்கோவையார் – பேராசிரியர் உரையும் பழைய வுரையும் (அச்சில்)	
9	ஒன்பதாம்திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு (மூலம்மட்டும்)	0 56
10*	திருமந்திரம் ,, ...	2 50
11	பதினோராந்திரு முறை ,, ...	1 25
12	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)....	0 25
13	திருக்கைலாய ஞானவுலா-உரையுடன்	0 50
14	பெரிய புராணம் (மூலம்மட்டும்)	2 50
15*	அகத்தியர் தேவாரத்திரட்டு	0 37
16	திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்)	3 00
17	தாயுமான சுவாமிகள்பாடல்-குறிப்புரையுடன்	1 25
18	கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்)....	1 75
19	கந்தபுராணம்—முதல் மூன்று காண்டங்கள் ,, ...	2 75
20	,, யுத்த தேவகாண்டம் ,, ...	2 00
21	,, தக்ஷகாண்டம் ,, ...	1 50
22	கந்தபுராண வசனம் அச்சில்	
23	கந்தர் அலங்காரம்-குறிப்புரையுடன்	0 25
24	கந்தரநுபூதி	0 13
25	கந்தர் கலிவெண்பா – ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன்	0 37
26	கந்தர்கலிவெண்பா-மூலம் மட்டும்	0 06
27	கந்தர் கலிவெண்பா - மூலமும்—உரையும்	0 37
28	நீதிநெறிவிளக்கம்—ஆங்கிலம் ஹிந்தியும் கூடியது	0 50
29	சகலகலாவல்லிமாலை—ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	0 06
30	சிவஞான சித்தியார், ஹிந்தி மட்டும்	1 00
31	திருக்குறள்—அறத்துப்பால் மூலம் குறிப்புரையும் ஹிந்திமொழிபெயர்ப்பும்	1 50
32	திருக்குறள்—பொருட்பால் ,, ...	2 50
33	திருக்குறள்—காமத்துப்பால் ,, ...	1 00
	ஷை 31, 32, 33 திருக்குறள் 3 புத்தகமும்	4 00

Registered With the Registrar of Newspapers for India
Under No R. No. 1485/57.

Regd. No. M. 5574 குமரகுருபரன்.

34	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	....	0 75
35	திருக்குறள்—பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	....	0 13
36	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	....	0 75
37	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	....	0 37
38	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்—மதுரைக் கலம்பகம்—நீதிநெறி விளக்கம் – மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை—மதுரை மீனாட்சியம்மை குறம்	....	2 75
39	திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் }	....	1 25
40	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை-தில்லைச்சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	....	1 00
41	பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம்—சகலகலாவல்லி மாலை }	....	1 00
42	சிதம்பரச் செய்யுட்கோவை	....	0 75
43	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் (அச்சில்)		
44	தமிழிசைப்பாக்கள் (அச்சில்)		
45	பெரியபுராணம்—உரைநடை	....	2 00
46	திருவிளையாடற் புராணம்—உரை நடை	....	2 25
47	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும்	....	0 50
48	அபிராமி பட்டர் பிரபந்தம் (மூலம்மட்டும்)	....	0 31
49	திருக்கயிலைத் திருமுறை	....	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	....	0 19
51	செந்திலாண்டவன் மகிமை	....	0 13
52	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால்3ம்பதிப்பு		1 37
53	ஷை ஷை பொருட்பால்	....	2 75
54	ஷை ஷை காமத்துப்பால்	...	1 20

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள் :-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோவில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"தியாகராஜ விலாசம்" 53, பிள்ளையார் கோவில் தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5.

குறிப்பு:- * இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச் சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் -'60.